Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...
- சீதனம் அன்பளிப்பா அபகரிப்பா - பக். 5
- எம்.ஜி.ஆரிடம் முகமது அலி கேட்ட மீன்குழம்பு - பக். 4

விலை : ரூபா 20.00

செய்தி - 37 ஜுன் 11-17, 2016 பக்கம் - 20

## காங்கேசந்துறை சீமெந்துத் தொழிற்சாலை அமைச்சர் றிஷாட் தூங்குகிறாரா?



(கொழும்பு)

சென்ற ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி கைத் தொழில் மற்றும் வணிகத்துறை அமைச்சரும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான றிஷாட் பதியுதீன் சேதமடைந்திருக்கும் காங்கேசந்துறை சீமெந்து தொழிற்சாலையைப் பார்வையிட்டு விட்டு யாழ் மாவட்ட செயலாளர் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மீண்டும் இதனை இயக்க முன் வந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இந்தத் தொழிற்சாலையின் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான இயந்திரங்களை 19 மே 2009 ஆம் ஆண்டின் பின் வெட்டி பழைய இரும்புக்கு விற்ற யாழ் கட்டளைத் தளபதி மீது நடவடிக்கை எடுப்ப தாக பகிரங்கமாகக் கூறினார்.

செயலகத்தில் நடந்த கலந்துரையாடலின் போது இந்த சீமெந்து தொழிற்சாலையின் இயந்திரங் களை வெட்டி பழைய இரும்புக்கு விற்ற யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி மீது நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்தா.

ஆனால் இதுவரை ஒன்றுமே நடைபெறவில்லை. அமைச்சர் றிஷாட் பதியுதீன் தூங்கி விட்டாரா? என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வட மாகாண சபை உறுப்பினருமான எம். கே. சிவாஜி லிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது சம்பந்தமாக சிவாஜிலிங்கம் தினச்செய் திக்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில் இந்தத் தொழிற்சாலை 1950 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கி வ ந்தது.1990 ஆம் ஆண்டின் பின் இயங்க வில்லை. ஆனால் இந்த தொழிற்சாலையிலிருந்த பலகோடி ரூபா பெறுமதியான இயந்திரங்கள் யுத் தம் முடிவுறும் வரை அங்கேயே இருந்தன.

19 மே 2009 ஆம் ஆண்டுக்குப்பின் இந்த தொழிற் சாலை ஏற்கனவே உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இருந்ததால் அங்கு கட்டளைத் தளபதியாக இருந் தவரின் கழுகுப் பார்வைக்கு இலக்காயிற்று. பல கோடி பெறுமதியான இரும்புகளை அறுத்து பழைய இரும்புகள் எனக் கூறி எந்த விதமான அதிகாரமும் இல்லாமல் அக் கட்டளைத் தளபதியால் விற்கப் பட்டது.

02 இல்

## 1950 ற்குப் பின்னர் புதுப்பொலிவு பெறுகிறது பருத்தித்துறை துறைமுகம்




(கொழும்பு)

பருத்தித்துறை துறைமுகம் 600 கோடி ரூபா செலவில் புதுப்பொலிவு பெறவுள்ளது. முன்னொரு காலத்தில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு இந் தியாவில் இருந்து அரிசி மற்றும் இதர உணவுப் பொருட்கள் பெரிய பாய்க்கப்பலில் வந்திறங்கியது.

1950 ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்த துறைமுக செயற் பாடுகள் நிறுத்தப்பட்டுவிட்டன. ஆனால் மீண்டும் பருத்தித்துறை துறை முகத்தை புதுப் பொலிவுடன் இயங்க வைக்க சிறைச்சாலை சீர் திருத்தம் மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவலக அமைச்சு முன் வந்துள்ளது என அதன் செயலாளர் சிவஞானசோதி தினச் செய்திக்கு தெரிவித்தார்.

18 இல்




## நல்லாட்சி அரசின் நடவடிக்கையால் குலைநடுங்கும் உயரதிகாரிகள்

### இது ஒரு அலசல் றிப்போட்





(கொழும்பு)

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிர மசிங்க ஆகியோரின் தலைமையில் உள்ள அரசில் உயர் அதிகாரிகள் அச்சத் துடனும் நடுக்கத்துடனும் செயற்பட்டு வரு கின்றார்கள். அபிவிருத்தி வேலைத் திட் டங்களையோ புதிய நிர்வாக முயற்சிக ளையோ எடுக்க அஞ்சி நடுங்குகின்றனர்.

இந்த விடயம் சம்பந்தமாக தினச்செய்தி மேற்கொண்ட விசார ணையின் போது இந்த உண்மை கள் தெரியவந்தது.

கடந்த காலங்களில் அமைச் சின் செயலாளர்கள் திணைக் களங்களின் தலைவர்கள் நாட்டின் அபி விருத்தியைக் கருத்தில் கொண்டு பல புதிய வேலைத்திட்டங்களை அறிமுகப் படுத்தி அதை ஆர்வத்துடன் செய்து வந் தார்கள். ஆனால் மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அரசில் உய ரதிகாரிகளின் பங்களிப்புக் குறைந்து கொண்டே வருகிறது.

02 இல்

# தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016



தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## நிதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கை இல்லா தீர்மானம்

கூட்டு எதிர்க் கட்சிகளால் நாடாளுமன்றத்தில் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிரான வாக்கெடுப்பு முடிவுக்கு வந்துள்ளது. இந்த பிரேரணை மீது சென்ற 9 ஆம் திகதி பெயர் குறிப்பிட்டு வாக்குகள் பதிவு செய்யப்பட்டது.

அவ்வாறு பதிவு செய்யப்பட்ட போது 145 பேர் பிரேரணைக்கு எதிராக வாக்களித்தனர். 51 உறுப்பினர்கள் ஆதரவாக வாக்களித்தனர். 28 உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ள வில்லை.

இந்த வாக்கெடுப்பில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன் அவரது கூட்டணியைச் சேர்ந்த உறுப்பினர்களும், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, தொழிலமைச்சர் ஜோன் செனவிரட்ண, மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் டிலீப் விஜயசேகர, ஸ்ரீபால ஹம்லத், டொக்டா நலிந்த ஜெயதிஸ்ஸ, பிரேம்லால் ஜெய சமீர ஆகியோர் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

ஈழமக்கள் விடுதலைக் கட்சியின் தலைவரும் அக் கட்சியின் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா கூட்டு எதிர்க்கட்சியை எதிர்த்து அரசாங்கத்துக்கு சார்பாக வாக்களித்தார்.

இந்த விவாதத்தின் ஆரம்பத்தில் 8 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெறுவதாக சபையின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டது. ஆனால் நாடாளுமன்றத்தின் ஒலிவாங்கியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இந்த விவாதத்தை சபாநாயகர் ஒத்தி வைத்தார். பின்னர் மீண்டும் 9 ஆம் திகதி காரசாரமாக நடைபெற்றது. இந்த விவாதத்தின் போது கூச்சல், குழப்பம், குற்றச்சாட்டு, கண்டனங்கள் ஆகியவற்றுக்கு பஞ்சம் இருக்கவில்லை.

ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் நேரலையாக தொலைக்காட்சியில் காட்டப்பட்டது. பலர் இந்த விவாதத்தை தொலைக்காட்சியில் பார்த்து வெட்கமடைந்தனர்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் அவரது இருக்கையில் அமர்ந்து கொண்டு விவாதத்தை அவதானித்துக் கொண்டிருந்தார்.

இந்த விவாதம் சம்பந்தமாக பதிலளித்து பேசுகையில் ஒரு கட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான நம்பிக்கை இல்லா தீர்மானம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக கொண்டு வரவேண்டும். என்று குறிப்பிட்டார்.

அதேநேரத்தில் இந்த நம்பிக்கையில்லா விவாதத்தில் முன்னாள் ஜனாதிபதி ஏன் பங்குபற்றவில்லை என்ற கேள்விக்கு கூட்டு எதிர்கட்சி உதய கமன்பில்ல பதிலளிக்கையில் இந்த வாக்கெடுப்பில் கலந்து கொண்டு பொன்னான நேரத்தை வீணடிக்க அவர் விரும்பவில்லை மஹிந்த ராஜபக்ஷவின் வாக்கு ஏனைய உறுப்பினர்களின் வாக்குகளைப்போல் மேலும் ஒரு வாக்காக இருந்திருக்கும் ஆனால் அவர் முன்னாள் ஜனாதிபதி அவர் வாக்கு விஷேசமாக இருக்க வேண்டும். இவர் எப்பவாவது வாக்களிக்க வந்தால் அன்று அதிகார மாற்றம் ஏற்படப் போகிறது என்று கருத வேண்டும் என்ற கூறினார்.

கூட்டு எதிர்க் கட்சியினர் கொண்டு வந்த இந்த விவாதத்தில் ஜே.வி. பி யினரும் வாக்களித்தனர். ஆனால் இந்த விவாதத்தில் எந்த மாற்றமும் தெரியவில்லை. ரவி கருணாநாயக்காவின் பலம் அதிகரித்துக் கொண்டே தான் போகின்றது.

எனவே அவ்வாறான விவாதங்களைத் தவிர்த்து நாட்டின் நலனில் அக்கறை கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செயற்பட வேண்டும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நல்லாட்சி அரசின் ...

தினச்செய்தி மேற்கொண்ட நுணுக்கமான விசாரணையின் போது மைத்திரி - ரணில் தலைமையிலான நல்லாட்சி அறிமுகம் செய்துள்ள நிதி குற்றப் பிரிவு லஞ்சம் மற்றும் ஊழல் ஆணைக்குழு துப்பறியும் பொலிஸ் சேவை ஆகியவற்றின் விசாரணைகளைக் கண்டு உயர் அதிகாரிகள் அஞ்சுகின்றார்கள்.

எனவே வீணாக முந்திரிக் கொட்டைத் தனமாக புதிய வேலைத் திட்டங்களை "அறிமுகப் படுத்துகிறோம் அமுல்படுத்துகிறோம்" என்று செய்ய வெளிக் கிட்டால் இறுதியில் தங்கள் ஓய்வு காலத்தில் கிடைக்க வேண்டிய ஓய்வூதியமும் இல்லாமல் போய் விடும் என்று அஞ்சுகின்றனர்.

இது சம்பந்தமாக தினச்செய்தி செய்த விசாரணையில் தெரிய வந்தது என்னவென்றால் புதிய அபிவிருத்தித் திட்டங்களை அறிமுகம் செய்து அதில் ஈடுபாட்டுடன் செயற்படும் போது நிதி மோசடிப் பொலிஸார் அடிக்கடி அழைத்து விசாரணை செய்கிறார்கள் நீதி மன்றம் சென்று பதில் கூற வேண்டியுள்ளது. பொலிஸ் பிரிவு விசாரித்து கைது செய்கின்றது. இவ்வளவு கஷ்டங்களும் சங்கடங்களும் உயரதிகாரிகள் இந்த நல்லாட்சி அரசில் எதிர்கொள்ள வேண்டியுள்ளது எனத் தெரிய வருகிறது.

எனவே வேலையிலிருந்து ஓய்வு பெறும் போது தங்கள் ஓய்வூதியங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஒன்றுமே செய்யாதிருப்பது தான் இன்றைய சூழ்நிலையிலிருந்து தப்புவதற்கு ஒரே வழி என்று உயர் அதிகாரிகள் கருதுவதாக தெரியவருகிறது.

முன்னைய காலங்களில் வேலைத்திட்டங்களில் ஏதாவது தவறு ஏற்பட்டால் ஜனாதிபதி காரியால யத்திலிருந்து விசாரணை செய்வார்கள் அவ்வாறான விசாரணையின் போது விளக்கங்களைக் கொடுக்க முடியும். தவறுகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் முடியும். தவறான திட்டங்களை மாற்றியமைத்து வெற்றிகரமான திட்டங்களாக மாற்றவும் முடியும் என்றார்கள்.

ஆனால் இன்றுள்ள சூழ்நிலை வேறு உயர் அதிகாரிகள் பொலிஸாருக்கு பதில் சொல்ல வேண்டியுள்ளது. குற்றம் நீதி மன் றம் விசாரணை தண்டனை என்று பயப்படுகிறார்கள். நல்லாட்சி அரசின் போக்கு தாச்சிக்குள்ளிருந்து நெருப்புக்குள் விழுந்தது போல் எனக் கூறப்படுகிறது.

எந்த ஆட்சி வந்தாலும் அந்த ஆட்சிக்கு அதிகாரிகளின் அச்சம் இல்லாத ஒத்துழைப்பு கிடைக்க வேண்டியது அவசியம்.

மைத்திரி - ரணில் நல்லாட்சி அரசில் அதிகாரிகள் அவர்கள் எதிர்நோக்க வேண்டிய அச்சங்களை யூகித்து வாழாவிருப்பதே சிறந்த வழி என்று முடிவு செய்துள்ளனர் போலும்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## 1950 ற்குப் பின்னர்...

தென்பகுதியில் உள்ள டிக்கோவிற்ற மீன்பிடி துறைமுகம் போலவே பருத்தித்துறை துறைமுகத்தையும் சிறந்த மீன்பிடி துறைமுகமாக மாற்றி அமைக்க முன்வந்ததாக அமைச்சின் செயலாளர் வி.சிவஞானசோதி கூறினார்.

இந்த துறைமுகத்திற்கு ரூபா 600 கோடியை ஏசியன் வங்கி வழங்கவுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார். இந்த துறைமுகத்தின் கடற் பரப்பை 15 மீற்றர் ஆழப்படுத்த திட்டமிட்டுள்ளது.

முன்பு வட பகுதியில் மயிலிட்டி துறைமுகம் தான் மீன்பிடியாளருக்கென தனியாக இருந்தது. இன்று அந்த துறைமுகம் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ளதால், எமது மீனவர்கள் தேவையான வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ்குடா நாட்டை சேர்ந்த குறிப்பாக, வடமராட்சியை சேர்ந்த மீனவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்கப் படவுள்ளதாகவும், மற்றும் வடகிழக்கு பகுதியில் உள்ள இந்து சமுத்திர கடற்பரப்பில் வடமராட்சியைச் சேர்ந்த மீனவர்கள் மீன்பிடிக்க ஆள்கடல் மீன்பிடி வசதி செய்து கொடுக்கும் நோக்கத்துடன் தான் இந்த துறைமுகம் புதுபொலிவு பெறவுள்ளது என்று வி.சிவஞானசோதி கூறினார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## காங்கேசந்துறை சீமெந்து...



இது சம்பந்தமாக சென்ற ஏப்ரல் 25 ஆம் திகதி அமைச்சர் றிஷாட் பதியுதீன் அந்த தொழிற்சாலையை பார்வையிட்ட போது இந்த இயந்திரங்களையெல்லாம்பழைய இரும்புக்கு விற்றவர் யார் என்று பத்திரிகையாளர் பகிரங்கமாக எடுத்து விளக்கிக் கூறினார்கள்.

அதையடுத்து யாழ் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது விசாரணை ஆணைக் குழு ஒன்றை அமைத்து விசாரிப்பதாக மகாணசபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தி யில் உரையாற்றும் போது உத்தரவாதமளித்தார். ஆனால் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

மேலும் கைத் தொழில் வணிகத்துறை அமைச்சர் தமிழ் பேசும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவரான றிஷாட் பதியுதீன் தலைமையின் கீழ் இயங்குகிறது.

றிஷாட் அமைச்சில் தமி ழர் ஒழிப்புஇந்த அசைச்சின்கீழ் 20க்கும் மேற்பட்ட கூட்டுதாபனங்கள் இயங்குகின்றன. இந்த 'கூட்டுதாப னங்கள் எதற்குமே தமிழர்களை தலைவர்களாகவோ நிர்வாக இயக்குனர்களாகவோ றிஷாட் நியமிக்கவில்லை.

இந்த கூட்டுதாபனங்களுக்கும் சட்டபூர்வமாக இயங்கும் அமைப்புகளுக்கும் அமைச்சர் றிஷாட்டின் உறவினர்களும் நண்பர்களும் தலைவர்களாகவும் நிஉவாக உத்தியோகத்தவராகவும் உள்ளனர்.

ஒரு சிறுபான்மை இனமாகிய முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த அமைச்சர் தமிழரையும் தமிழ் இனத்தையும் புறக்கணித்தால் எவ்வாறு அவரை தமிழர்கள் ஆதரிக்க முடியும் என்று சிவாஜிலிங்கம் கேட்டார். வன்னித் தொகுதியின் நாடாளுமன்ற உறுப் பினரான அமைச்சர் றிஷாட் முஸ்லிம் மக்களின் வாக்குகளால் மாத்திரமே தேஉதலில் வெற்றி பெறவில்லை தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளாலேயே வெற்றி பெற்றார் என்பது தேர்தல் முடிவுகளை ஆராயும் போது தெரிய வந்ததாக சிவாஜிலிங்கம் கூறினார்.

ஆனால் இன்று றிஷாட் தமிழ் மக்களின் நலன்களை கிடப்பில் போட்டு விட்டு அவர்க ளின் தலையின் மேல் ஏறி நின்று முஸ்லிம் மக்களின் தலைவராக மாறும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இது எந்த விதத்தில் நியாயம் என்று சிவாஜிலிங்கம் கேட்டுக் கொண்டார்.

தமிழனை ஒழித்து முஸ்லிம்களை வாழ வைப்பது ஒரு நல்ல தமிழ் அரசியல் தலைவனின் பண்பு அல்ல என்று நினைவுபடுத்துவதாக சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

# முட்டை ஓடு இல்லாமல் குஞ்சு பொரித்து ஜப்பான் மாணவிகள் சாதனை

(ஜப்பான்)

முட்டை கருவில் இருந்து கோழி குஞ்சுகள் உருவாவதற்கு ஓடு என்பது மிக முக்கியமான ஒன்றாகும். முட்டையின் ஓடுதான் அந்த கோழி குஞ்சுக்கு கருப்பையைப் போன்றது என காலகாலமாக மக்களிடையே நீடித்து வந்த நம்பிக்கையை, ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள சிபா அரசு உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் உயிரியல் பிரிவு மாணவிகள் உடைத்திருக்கிறார்கள்.

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் இருந்து சுமார் 40 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள சிபா அரசு உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் உயிரியல் பிரிவு மாணவர்கள் புதிய முயற்சியின் மூலம் பாரம்பரியமான கோழி அடைகாக்கும் நம்பிக்கையை பொய்யாக்கியுள்ளனர். ஒரு சாதாரண பிளாஸ்டிக் உறையை எடுக்கும் ஒரு மாணவி அதை ஒரு கூம்பு வடிவிலான பொருளின்மீது வைத்து உறையின் அடர்த்தியை குறைக்கும் வகையில்



அதை இழுத்து பெரிதாக்குகிறார். அந்த உறையை ஒரு பிளாஸ்டிக் டம்ளரின்மீது போர்த்தி, முட்டையை உடைத்து டம்ளருக்குள் ஊற்றுகிறார். பின்னர், திறந்த நிலையில் அந்த டம்ளரை

பொரிப்பானில் (இன்குபேட்டர்) வைத்த பின்னர் முட்டையின் மஞ்சள் கருவின் சிறு துணுக்காக தோன்றும் உயிரணு மூன்றே நாட்களில் இதயமாகவும், அடுத்த 21 நாட்களில் முழு உடல் வளர்ச்சியுடன் முடி, இறக்கை போன்றவையும் வளரப்பெற்ற கோழிக்குஞ்சாக நடைபோடுகிறது. இதன் மூலம், முட்டையின் ஓட்டுக்குள்தான் குஞ்சுகள் பொரிக்கும் என்னும் பழைய சித்தாந்தம் தவிடுபொடியாகி உள்ளது. இந்த ஆய்வை வீடியோவாக யூடியூபில் வெளியிட்டுள்ளனர். இதுவரை அந்த வீடியோவை 5 கோடி பேர் பார்த்திருக் கிறார்கள்.

## மரம் முறிந்து விழுந்து ஆறு வீடுகள் சேதம் - 40 பேர் பாதிப்பு-



(க.கிருஷாந்தன்)

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெட்டபுலா கடியன்லென தோட்டத்தில் பழமைவாய்ந்த மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் ஆறு வீடுகள் சேத மாகியுள்ளது. இதில் மூன்று வீடுகள் முற்றாகவும், மேலும் மூன்று வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக தோட்ட நிர்வாகம் தெரிவிக்கின்றது. கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்த பாரிய சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடியிருப்பாளர்களுக்கு உயிர் சேதம் எதுவும் இடம்பெறவில்லை என தெரிவிக்கும் தோட்ட நிர்வாகம் வீடுகளில் உள்ள பொருட்கள் முற்றாக சேதமடைந்திருப்பதாக தெரிவிக்கின்றனர்.

அத்தோடு பாதிக்கப்பட்ட ஆறு குடும்பங் களை சேர்ந்த 40 பேர் தற்காலி கமாக தோட்ட கலாசார மண்ட பத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான உதவிகளை தோட்ட நிர்வாகம் செய்து வருகின்றது.மரம் முறிந்து விழுந்ததன் காரணமாக இப்பகுதிக்கான மின்சார துண்டிப்பு ஏற்பட்டுள்ளதோடு திருத்த பணிகளை நாவலப்பிட்டி மின்சார சபையினர் மேற்கொண்டு வருகின்றனர். பழமைவாய்ந்த மேற்படி மரத்தை அப்புறபடுத்தும் நடவடிக்கையில் தோட்ட நிர்வாகமும், பிரதேசவாசிகளும் ஈடுபட்டுள்ளனர்.

## முப்பத்திஐந்து தமிழ் அகதிகள் இலங்கைக்குவருகை

(கொழும்பு)



அகதிகளுக்கானஐக்கியநாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகத் தினுடைய (UNHCR)வசதிப் படுத்தலுடனும் ஒருங்கிணைப்புடனும் முப்பத்திஐந்து இலங் கைதமிழ் அகதிகள் தமிழ்நாட்டிலிருந்து 14ஆம்திகதி செவ்வாய்க்கிழமை இலங்கைக் குவருகைதரஉள்ளனர். சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு,புனர்வா ழ்வளிப்பு,மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க தொழில் முயற்சிகள் அபிவிருத்திஅமைச்சும்மிஹ ின்லங்காவிமானசேவைநிறுவனமும் அவர்களதுபயணப்பொதியின் அளவை அதிகரித்துள்ளது.

35பேரில் 18ஆண்களும் 17பெண்களும் உள்ளடங்குகின்றனர். திருகோணமலை,மன்னார்,மாத்தளை, முல்லைத்தீவு,கிளிநொ ச்சி யாழ்ப்பாணம்ஆகியமாவட்டங்களில் இவர்கள் மீள்குடியமர்த்தப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு,புனர் வாழ்வளிப்பு,மீள்குடியேற்றம் மற்றும் இந்துமதஅலுவல்கள் அமைச்சின் செய லாளர் வே.சிவஞான சோதிதெரிவித்தார்.

## கிரிமலைக்கடலில் கற்களை அகற்று கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

பிதுர் சாந்தி செய்யும் கீரிமலை கடல் பிரதேசத்தில் உள்ள கற்களை அகற்றுமாறு இந்து விவகார அமைச்சருக்கு பகிரங்க வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் வட பகுதியில், பிதுர் சாந்திக்கான அந்தியேஷ்டி மடம் உள்ளது. அந்த மடத்தில் தான் பிதுர்களுக்கு சாந்தி செய்யப்படுகிறது. அவ்வாறு செய்யப்படும் சாந்தி அந்த மடத்திற்கு வடக்கே உள்ள கடலில் சென்று தண்ணீரில் நின்று கொண்டு, தங்கள் பிதுர்களுக்கு ஆத்ம சாந்திக்காக சைவ மதத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் சாந்தி சம்மந்தப்பட்ட கடமைகளை செய்து முடிப்பார்கள். அவ்வாறு செய்து விட்டு அந்த கடலில் முழ்கி எழும்பி வெளியே வந்து தொடர்ந்தும் பூஜைகளை தொடர்கிறார்கள். இந்த பிதுர் சாந்தி விடயநியமனங்களை இந்த கடலுக்குள் இறங்கி செய்ய முடியாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். கடலிலுள் இறங்கும் போது அதற்குள் உள்ள கூரிய கற்பாறைகள் கால்களில் குத்தி கிழித்து இரத்தம் சொட்டி கஸ்டப்படுகிறார்கள்.

இது சம்மந்தமாக இந்த அந்தியேஷ்டி வேலைகளை செய்யும் தலைமை ஆச்சாரியார் பிரம்ம ஸ்ரீ கா.சந்திரசேகர சா்மா (கீரிமலை ஐயர்) கருத்து தெரிவிக்கையில் ' இந்த கடல் கல்லுகள் சம்மந்தமாக பல முறை சம்மந்தப்பட்ட பிரதேசசபை மற்றும் மாகாணசபை, உயர் அதிகாரிகளுக்கும் தெரிவித்தேன். ஆனால் எந்தவிதமான நடவடிக்கைகளும் அவர்கள் எடுக்கவில்லை". விசனத்துடன் கூறினார்."மேலும் இந்த கடல் நீரில் உள்ள கற்பாறைகளை நான் எனது சொந்த செலவில் அகற்றுகிறேன் எனக்கு அனுமதி தாருங்கள் என கேட்டேன் அதற்கும் யாரும் அனுமதி தரவில்லை."இந்து விவகார அமைச்சு இந்த பிதுர் சாந்தி செய்யும் இந்த கடல் பகுதியை உடனடியாக கற்பாறைகளை அகற்ற முன்வர வேண்டும். இங்கே அந்தியேஷ்டி மாத்திரம் நடைபெறுவதில்லை சித்திராபௌர்ணமி, ஆடி அமாவாசை போன்றவற்றுக்கு தேவையான சாந்திகளும் இந்த கடற்பரப்பில் தான் நடைபெறுகின்றன என பிரம ஸ்ரீ கா. சந்திரசேகர சா்மா கூறினார்."எனவே, இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து இந்து விவகார அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கீரிமலை ஐயர் பிரம்ம ஸ்ரீ சந்திரசேகர சா்மா கேட்டுக்கொண்டார்.


## கட்டாக்காலி நாய்களை ஒழிக்க வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை கட்டுப்படுத்த முடியாதளவு அதிகரித்துள்ளது. சிறுவீதி முதல் நகர்ப்புற பெருந்தெரு வரை கட்டாக்காலி நாய்கள் சுதந்திரமாக வலம் வருவதாக சுன்னாகத்தில் உள்ள பிரபல சமூக சேவையாளர் நடராசா வசீகரன் தெரிவித்தார்.

கட்டாக்காலி நாய்களை ஒழிக்குமாறு வேண்டுகோள் விடுத்து ஜனாதிபதி மைத்திரிக்கு அவர் தொலை நகல் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன், சுகாதார அமைச்சர் ரஜித சேனாரட்ண,வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் ஆகியோருக்கு அத் தொலை நகலின் பிரதியை அனுப்பிவைத்துள்ளார் மாணவர்களையும், பொதுமக்களையும் கட்டாக்காலி நாய்கள் கடிப்பதால் அவர்கள் அச்சத்துடன் நடமாடுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அலவி மௌலானாவின் உடல் நிலை கவலைக்கிடம்



(கொழும்பு)

கொழும்பு டேடான்ஸ் தனியார் வைத்தியசாலை யில் சுகவீனம் காரணமாக கடந்த ஒருவாரமாக அனுமதிக்கப்பட்டிருந்த மேல் மாகாணமுன்னாள் ஆளுநர் அலவி மௌ லானா தெஹிவளை யில் உள்ள அவரது வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டார். எதிர் வரும் திங்கட்கிழமை ஆசா வைத்தியசாலையில் அவருக்கு நுரையீரல் அறுவை சிகிச்சை நடைபெற உள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான அலவி மௌலானா நாடாளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் பதவி வகித்தவராவார். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜப்பனுக்கு விஜயம் செய்யமுன்னர் அலவியின் வீட்டுக்குச்சென்று அவரது உடல்நிலை பற்றி விசாரித்தார். அடுத்த ஆண்டு ஜனவரி ஜனவரி மாதம் 1 ஆம் திகதி 85 வயதைப் பூர்த்திசெய்யும் அலவி மௌலானாவின் சிகிச்சை வெற்றி பெற பிரார்த்திப்போம்.



# அரசகேசரியின் பதில்கள்

**கேள்வி:- கொஸ்கமஇராணுவ ஆயுதகிடங்கு விபத்து என்ன சொல்கிறது?**

மு. கோகுலன், கொழும்பு 13.

பதில்: இராணுவத்தின் அசண்டையீனம் இதனால் தெரியவருகிறது.

**கேள்வி:- ராஜீவ்கொலையில் குற்றம் சாட்டப் பட்டவர்களை விடுதலை செய்ய கோரி நடைபெறவுள்ள பேரணியால் அவர்களுக்கு விடுதலை கிடைக்குமா?**

மு.தயாளன், உடுப்பிட்டி.

பதில்:– ஆர்ப்பாட்டம் பேரணி எல்லாம் விடுதலையை தூண்டுவிக்கும் உந்து சக்கியாகவே இருக்கிறது

**கேள்வி:- ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் கோத்தாவை இணைக்கசிலர் முயற்சிப்பதன் காரணம் என்ன?**

சி. வதனா , வவுனியா.

பதில்:– மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுபோடும் விடயம் இது

**கேள்வி :சட்டம் நிறைவேற்றித்தான் ஆலயங்களில் மிருகபலியை நிறுத்த வேண்டுமா?**

த. வடிவேல் , பண்டத்தரிப்பு.

பதில்:– அப்படி செய்தால் தான் இறைச்சி சுவையில் மிதக்கும் இந்து பக்தர் க்ளைக் கட்டுப்படுத்த முடியும்

**கேள்வி:- சிகாவைரசால் பிரேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக்போட்டி பாதிப்படையுமா?**

சி. சரோஜினிதேவி, மன்னார்.

பதில்:– கேள்விக்குறிதான்

**கேள்வி : இலங்கையில் தற்கொலை வீதம் அதிகரிக்க காரணம் என்ன?**

அ. ஜீவகன் , புதுக்குடியிருப்பு.

பதில்:– வறுமை

**கேள்வி:- காதலிப்பது தண்டனைக்குரிய குற்றமா?**

பதில்:– காதல் என்பது புதுமையான உணர்வு உணர்வு அதிகரிக்க தற்காலிக மனவியாதி ஏற்படும் மனவியாதியால் தற்கொலை செய்யும் மன எண்ணம் அதிகரிக்கும்

**கேள்வி:- திருமணமான ஆண்களை சினிமா நடிகைகள் காதலித்து திருமணம் செய்வதன் நோக்கம் என்ன?**

ச. கஜமுகன் , கிளிநொச்சி.

பதில்:– இதை நடிகை ராதிகாவிடம் தான் கேட்க வேண்டும்

**கேள்வி:- அரசியல் வாதிகளின் சொத்துகள் வருடா வருடம் அதிகரிப்பதன் காரணம் என்ன?**

உ. பிரியா, திருகோணமலை.

பதில்:–இந்த கேள்வி தேவையற்றது நீங்களும் நானும் இந்த நாட்டில் தான் வாழ்கிறோம்.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி, சுன்னாகம்.*

# எம்.ஜி.ஆரிடம் முகமது அலி கேட்ட மீன் குழம்பு


விளையாட்டுப் போட்டியில் " த கிரேட்டஸ்ட்" என்ற தகுதியைப் பெற்ற ஒரே வீரராக போற்றப்பட்டவர், குத்துச் சண்டை உலகின் முடிசூடா மன்னன் முகமது அலி. சில வருடங்களாக சுவாசக் கோளாறால் பாதிக்கப்பட்டிருந்த முகமது அலி, அரிசோனா மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்து மரணமடைந்தார். அமெரிக்காவில் 1942-ம் ஆண்டு ஜனவரி 17-ம் தேதி பிறந்த அலியின் இயற்பெயர் காசியஸ் மார்செல்லஸ் கிளே ஜூனியர். அவருக்கு "தி கிரேட்டஸ்ட்', "தி சாம்ப்', "தி லூயிஸ் வில்லி லிப்' என்ற 'நிக்' நேம்களும் உண்டு. 1964-ல் இஸ்லாமிய தேசம் என்ற அமைப்பு தொடங்கப்பட்ட போது அதில் தன்னை இணைத்துக்கொண்டு தனது பெயரை முகமது அலி என மாற்றிக்கொண்டார். பின்னர் 1975-ல் சன்னி முஸ்லிம் பிரிவுக்கு முழுமையாக மதம் மாறினார். அலியின் மகள் லைலா அலி, தந்தையைப் போன்றே குத்துச் சண்டையை தீவிரமாக நேசித்ததால், அவரும் பெண்கள் குத்துச் சண்டைப் போட்டியில் உலக சாம்பியன் பட்டம் வென்றிருக்கிறார்.தன்னுடைய பதினெட்டாவது வயதிலேயே உலகளாவிய குத்துச் சண்டை விருதை வென்றவர், அலி. 1960-ஆம் ஆண்டு ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்று தங்கப் பதக்கத்தை எளிதாகத் தட்டிச் சென்றார். ஆனால், குத்துச் சண்டை உலகம் முகமது அலியை அப்போது, சாதாரணமான ஒரு டெக்னிகல் பாக்ஸ ராகத்தான் பார்த்தது.

1965 பெப்ரவரி 25 ஆம் திகதி முகமது அலியின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனை நாளாக அமைந்தது. ஆம், அன்றுதான் 'சோனி லிஸ்டன்' என்ற (ஆபத்தான வீரர்' என்றறியப்பட்டவர்) முதல் நிலை குத்துச் சண்டை வீரரை தன்னுடைய 7-வது சுற்றில் டெக்னிக்கல் குத்துக்களால் வீழ்த்தினார். இதையடுத்து, உலக ஹெவி வெய்ட் குத்துச் சண்டை சாம்பியன் விருது முதன் முதலாக அலி, கைக்கு வந்து சேர்ந்தது. அலியை எப்படியும் வீழ்த்த வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொண்டு தீவிர பயிற்சியை மேற்கொண்ட சோனி லிஸ்டன் மீண்டும் ஒருமுறை அலியை களத்தில் சந்தித்தார். ஆனால், அதிக வேலை வைக்காமல் முதல் ரவுண்டிலேயே சோனி லிஸ்டனை நாக்-அவுட் முறையில் மண் கவ்வ வைத்தார் முகமது அலி.

அமெரிக்க ராணுவத்தில் கட்டாயமாக சேரும் ஆணையை ஏற்க மறுத்ததால் குத்துச்சண்டை போட்டியில் பங்கேற்பதற்கு சுமார் 4 ஆண்டுகளுக்கு தடையும், முகமது அலியின் சாம்பியன் பட்டமும் பறிக்கப்பட்டது. அந்த பட்டத்தை மீண்டும் தக்க வைத்துக் கொள்ள, வலிமை மிக்க 'ஜோ- பி-ரேசியர்' என்ற வீரருடன் மோதி முதல்முறை அலி தோல்வியுற்றார். ஆனால், அவரது விடா முயற்சி, 1974-ல் மீண்டும் , ஜோ பிரேசியருடன் மோதி உலக சாம்பியன் விருதை கைப்பற்ற காரணமானது.

அதேபோல் முதலில் மோதி, தோல்வியைக் கொடுத்த 'லியோன் ஸ்பிங்ஸ்' என்ற வீரரை சில ஆண்டுகள் இடைவெளியில் மீண்டும் களத்தில் சந்தித்து மூன்றாவது முறையாக உலக சாம்பியன் விருதைக் கைப்பற்றினார் அலி. நான்காவது முறையும் அதே பட்டத்தை தக்க வைத்துக் கொள்ள 'லாறி-ஹோம்ஸ்' என்ற மனித மலையுடன் மோதி தோல்வியைத் தழுவினார்.தன்னை தோற்கடித்தவர்களையே மீண்டும் தோற்கடித்து "ஒவ்வொரு வெற்றியும், முயற்சியாலும், பயிற்சியாலும் மட்டுமே சாத்தியப்படும், வெற்றி என்பது, எவர் ஒருவருக்கும் தனிப்பட்ட சொத்தல்ல" என்று வெற்றி மேடையிலேயே வெளிப்படையாக அறிவித்து பதக்கத்தை முத்தமிட்டவர் அலி.

இதன் பின்னரே அலிக்கு 'தி கிரேட்டஸ்ட்' என்ற பட்டம் அளிக்கப்பட்டது. அலியின் வாழ்க்கையை மையமாக வைத்து 'தி கிரேட்டஸ்ட்' என்ற சினிமாப்படமும் இதன் பின்னர் வெளியாகி அவர் புகழை பரப்பியது.அது, 1980-ஆம் வருடம்



சென்னை ஜவகர்லால் நேரு ஸ்டேடியத்தில் குத்துச் சண்டை பிரியர்கள் 20 ஆயிரம் பேர்களுக்கு மேல் திரண்டிருக்க, அரங்கமோ விசில் சத்தங்களாலும், கைதட்டல் களாலும் ஆர்ப்பரித்துக் காணப்பட்டது. "என்னைக் கவர்ந்த குத்துச் சண்டை வீரர் அலி மட்டும்தான்" என்று சொல்லியிருந்த, அன்றைய தமிழக முதல்வரும், குத்துச் சண்டைப் பிரியருமான எம்.ஜி.ஆர். அழைப்பின் பேரிலேயே சென்னைக்கு வந்திருந்தார் அலி. விழாவுக்கான ஏற்பாடுகளை அன்றைய ஒய்.எம்.சி.ஏ. பாக்ஸிங் கிளப் (நந்தனம்) செயலர், ஹெச். மோகனகிருஷ்ணன் செய்திருந்தார்.

முடிவில், முகமது அலிக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய எம்.ஜி.ஆர் எங்கள் தமிழகத்திற்கு வந்திருக்கிறீர்கள் உங்களுக்கு என்னவேண்டுமோ கேளுங்கள்... என அலியிடம் கேட்டார். அதற்கு அலி, "சென்னையில் மீன் உணவு சுவை என்கிறார்களே... அது எங்கு கிடைக்கும்? " என்றார். விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற எம்.ஜி.ஆரிடம் இப்படி ஒருவர் கேட்டால் அதுவும் உலக பிரபலம் கேட்டால் சும்மா விடுவாரா...அடுத்த நொடி ராமாவரம் தோட்டத்திற்கு போன் பறந்தது.

ராமாவரம் தோட்டத்தில் அசைவ உணவு சமைப்பதில் தேர்ந்தவரான மணி என்பவரிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஜானகி அம்மையாரின் மேற்பார்வையில் வஞ்சிரம் மீன் வறுவல், வெள்ளை சாதம், மீன் குழம்பு, வேகவைத்த முட்டை குழம்பு, இறால் ஃப்ரை, சிக்கன் வறுவல், உடன் பாயாசம் என விதவிதமான உணவுவகைகள் அன்று முகமது அலி தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது.

உணவு அருந்தியபின் உணவு எப்படி இருந்தது என எம்.ஜி.ஆர் கேட்டாராம். அதற்கு முகமது அலி, 'எனக்கு உலகில் எங்கு சென்றாலும் விதவிதமான உணவைத்தர ஆயிரம் பேர் இருக்கிறார்கள். ஆனால் அது என்னைக்கவர்வதற்கானதாக இருக்கும். நீங்கள் அளித்த உணவில் சுவையை விட கூடுதலாக இருந்தது உங்கள் அன்புதான்' என்று நெகிழ்வாக கூற, எம்.ஜி.ஆர் நெகிழ்ந்துநின்றாராம். முகமது அலியின் சென்னை விசிட் இப்படிதான் நெகிழ்வாக இருந்தது. திகட்டத் திகட்ட மீன் குழம்பு சாப்பாடும், வறுவலுமாக சென்னை மக்களிடமும், மக்கள் திலகத்திடமும் இருந்து பிரியாவிடை பெற்ற முகமது அலி, இன்று உலக மக்களிடம் இருந்து பிரியாவிடை பெற்றுக் கொண்டு விட்டார். முகமது அலி மீது அதீத பிரியம் கொண்டிருந்த, எம்.ஜி.ஆருக்கும், முகமது அலிக்கும் ஒரு ஒற்றுமை, இருவருமே ஜனவரி 17-ஆம் தேதி பிறந்தவர்கள்.

# சமூக விழிப்புணர்வுக் களம்



## சீதனம் அன்பளிப்பா பகரிப்பா

### ஓர் அலசல்

சென்ற வாரம் தொடக்கம் இந்தச் சமூகத்தை பீடித்த முக்கிய பிரச்சினைகள் சம்பந்தமாக அலச ஆரம்பித்தோம். சென்ற வாரம் காதல் சம்பந்தமாக ஆராய்ந்தோம். நேரடியாகச் சென்று



தங்களின் பிள்ளைகளின் நன்மைக்காக தாய் தந்தையரினால் விரும்பிக் கொடுக்கப்படுவது.
**நல்லதம்பி கதிர்காமலிங்கம்**
வயது - 65
மல்லாகம்


பலரைச் சந்தித்து அவர்களின் கருத்தை திரட்டி வெளியிட்டோம்.

தமிழ் மக்களின் வாழ்க்கையில் சீதனம் என்பது முக்கிய இடத்தில் இருக்கின்றது. இம்முறை அச்சீதனம் பற்றிய ஒரு தொகுப்பு:



பிள்ளைகளின் எதிர்காலம் நல்லாயிருக்கும்
**முருகேசு விஜயரட்ணம்**
தெல்லிப்பழை

மேலெழுந்த வாரியாக சீதனம் வாங்குவது இல்லை என்று சொல்லி விட்டாலும் அரசல் புரசலாக நீடித்துக் கொண்டே இருக்கின்றது. சீதனக் கொடுமையால் பல பெண் பிள்ளைகள் தற்கொலை செய்கின்றனர். அதனை இங்கே படம் பிடித்துக் காட்ட முடியாது. சீதனத்தால் சில ஆண்களின் திருமணமும் தடைப்படுகிறது. பெற்றோரின் நிர்ப்பந்தத்தினால் தனது விருப்பதிற்கேற்ற பெண்ணை திருமணம் செய்ய முடியாமல் அவர்கள் தவிக்கின்றனர்.



2000ஆம்ஆண்டளவில் ஆபிரிக்க நாடான சூடான் நாட்டில் நான் வேலை செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அது முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் நாடு. அங்கு ஆண்கள் திருமணம் முடிப்பதற்கு சீதனம் கொடுக்க வேண்டும். பெண் வீட்டிலுள்ள சகலருக்கும் உடுதுணி, சப்பாத்து போன்ற பொருட்களை கொடுத்துத்தான் திருமணம் செய்ய வேண்டும். அங்கு சீதனம் கொடுக்க முடியாத ஆண்கள் திருமணம் செய்ய முடியாமல் வாழ்கின்றனர்.



ஏராளமான பெண்கள் சீதனம் இல்லாமல் மணவாழ்க்கை காண முடியாது இருக்கின்றனர்.
**சீவரத்தினம் ஜெயசீலன்**
கோவில் வீதி, மல்லாகம்

இந்து மதத்தைப் பின்பற்றுபவர்கள் மத்தியில் பெண் பிள்ளையைப் பெற்றவர்கள் சீதனமாக வீடுவாசல், சொத்து எல்லாம் கொடுக்க வேண்டும். இத்தகைய சமூக நிர்ப்பந்தம் நிலவி வருவதால் பெற்றோர் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றனர். இதனால் பெண் பிள்ளைகள் திருமணத்தைக் கைவிட்டு தற்கொலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றார்கள்.



அவர்களின் நிலைமை, குடும்ப வாழ்க்கை முறைமைகளை அறிந்து சீதனம் வாங்கலாம்.
**பத்மநாதன் ஜெயசோதி**
மாவிட்டபுரம், மடத்தடி.

இளையோர் மத்தியில் சீதனம் வாங்குவது தவறு என்ற விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும்பெண்வீட்டாரிடமிருந்து எதுவும் வாங்க மாட்டோம் என்ற சிந்தனையை உருவாகச் செய்ய வேண்டும். புதிதாகத் திருமணம் செய்யும் ஆணும் பெண்ணும் சீதனம் வாங்குவது அபத்தம் என்றுதான் சொல்ல வேண்டும்.



நாங்களா குடுக்கலாம். கேட்டு வாங்குவது தவறு. அது ஆண் தரப்போ பெண் தரப்போ எங்கட பிள்ளை நல்லா இருக்க வேணும் எண்டா நாங்கதான் பாக்கணும்.
**த. ரஞ்சித். மல்லாகம்.**

எமக்கு கருத்து தெரிவித்தவர்களில் சிலர் சீதனம் வாங்குவது நல்லது என்றும் வாங்குவது தவறு என்றும் தமது கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.



வசதி இருந்தால் எங்கட பிள்ளைகளுக்கு கொடுக்கலாம். எங்களிட்ட இருக்குது. கொடுக்கிறம். வசதி இல்லாதவர்களுக்கு கஷ்டம்தான்.
**ச. சித்ரா**
மல்லாகம்.



அடிப்படை வசதிகளுக்காக பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும்.
**நாதன் அண்ணாமலை (பத்மஸ்ரீ)**
தெல்லிப்பழை



ஆணோ பெண்ணோ அவர்களுக்கு நான் சரி சமமாக கொடுப்பேன். என்ர பிள்ளை நல்லா வரவேணும். இது ஒரு ஊக்குவிப்பு.
**கதிரவேலு நேசன்**
சுன்னாகம்.



பிள்ளையளுக்குத்தானே குடுக்கிறம்
**சி. கேமமாலினி**
அளவெட்டி




நான் சீதனம் வாங்கவில்லை. ஆண் மகனுக்கு சீதனம் கொடுப்பது மடமையானது. எனக்கு மூன்று மகன்கள். என் பிள்ளைகளுக்கு நான் கூறுவது சீதனம் வாங்கக்கூடாது என்றுதான்.
**லக்ஸ்மணன் ரவீந்திரன்**
மல்லாகம்.


## சொன்னார்கள் சொன்னார்கள்



யுத்த காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து நியாயமான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு, ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.




"ரம்ஜான் புனித மாதம் துவங்கியுள்ளது. இத்தருணத்தில் முஸ்லிம் சமுதாய மக்களுக்கு என் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ரம்ஜான் புனித மாதத்தில் நம்மிடையேயான சகோதரத்துவம் மேலும் வலுக்கட்டும். சமுதாயத்தில் ஒற்றுமை ஓங்கி வளரட்டும்" - முஸ்லிம் மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.



ஹார்ட்லி கல்லூரி என்பது நாட்டின் பிரபல்யமான பாடசாலைகளில் ஒன்றாகும்.ஒரு காலத்தில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கணித விஞ்ஞான பிரிவுகளுக்கு அதிகளவில் ஹார்ட்லி கல்லூரி மாணவர்களே சென்றார்கள். போர் காரணமாக கல்லூரியின் கல்வி நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. வடக்கு கிழக்கு பாடசாலைகளை அபிவிருத்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.



தற்போதைய அரசாங்கத்தில் கீழ், நாட்டை ஆள்வது பொலிஸாரே அத்துடன் மக்கள் எதிர்பார்த்த மாற்றங்கள் தற்போதைய ஆட்சியில் இல்லை மேலும், பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் கட்டியெழுப்பிவிடலாம்.ஆனால், சமஸ்டி எனக்கூறி நாட்டை துண்டாடி விட்டால் ஒன்றும் செய்ய முடியாது என கோத்தபாய தெரிவித்துள்ளார்.




தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் அமைச்சுப் பதவி தருவதற்கு அரசாங்கம் தயாராக இருந்தது. குறிப்பாக மீள்குடியேற்ற அமைச்சுப் பொறுப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொள்ள வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எங்களை வற்புறுத்தியிருந்தார். ஆனால் நாங்கள் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் வேறு ஒருவருக்குப் போக இருந்த மீள்குடியேற்ற அமைச்சுப் பொறுப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுத்த நடவடிக்கை காரணமாக டி.எம். சுவாமிநாதனுக்கு வழங்கப்பட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா



இலங்கை மக்கள் அதிக சுமை மற்றும் பாரம் கூடியவர்களாக மாறிவருகிறார்கள் இதன் காரணமாக கடந்த பத்து வருடங்களாக மக்கள் தொற்று நோய் அல்லாத பிற நோய்களால் பீடிப்பது அதிகரித்து வருகிறார்கள் மக்களின் திடீர் மற்றும் போசாக்கற்ற உணவே இதற்கான காரணம் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தேசிய போசாக்கு வாரத்தை முன்னிட்டு இடம்பெற்று வரும் நிகழ்வில் கலந்துக்கொண்ட போதே சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன இதனைத் கூறியுள்ளார்.



நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு இந்த வருட இறுதிக்குள் ஏற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். அவ்விதமான தீர்வொன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. நாட்டில் வாழும் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் தமிழ் மக்களுக்கும், தமிழ் பேசும் மக்களுக்கும் நியாயமான நிரந்தரமானதும் நாட்டிற்கு உகந்ததுமான தீர்வாகவும் அமையவேண்டும்.பல்வேறுபட்டவர்கள் சில பல கருத்துக்களைக் கூறினாலும் நியாயமான நிரந்தர தீர்வொன்றை ஏற்படுத்துவதற்குரிய முயற்சிகள் தற்போது நடைபெற்று வருவதாக எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.



கூட்டணி ஆட்சி என்கிற கருத்துக்கு உடன்பட்டிருந்தால், விஜயகாந்தே தி.மு.க.வோடுதான் கூட்டணி அமைத்திருப்பார். தி.மு.க.வும் ஆட்சியைப் பிடித்து இருக்கும். இது நிதர்சனமான உண்மை. ஆனால் தி.மு.க., பிடிவாதமாக கூட்டணி ஆட்சிக்கு உடன்படவில்லை. அதையும் வெளிப்படையாகவே அறிவித்தது. அதன் பிறகுதான் தே.மு.தி.க., மக்கள் நலக் கூட்டணியோடு இணைகின்ற ஒரு சூழல் ஏற்பட்டது. என்றார். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன்

## கனடா கடோத்கஜா



'ஃப்யூரியஸ் பீட்' (**Furious Pete**) என்னும் யூ டியூப் பக்கத்தை வலம் வந்தால், பீட்டர் பல நாட்டு உணவுகளை வெளுத்துக்கட்டும் வீடியோக்களைப் பார்க்கலாம். 116 கிலோ எடையுள்ள இந்த மனிதர் சாப்பிடுவது கொஞ்சநஞ்சம் அல்ல. டைனிங் டேபிள் சைஸில் இருக்கும் பீட்சாவை தனி ஒருவராக விளாசித்தள்ளுகிறார். ப்ரேக் ஃபாஸ்ட்டுக்கு 12 பர்கர்களை லபக் லபக்கென உள்ளே தள்ளிவிட்டுத் தண்ணீரைக் குடிக்கிறார். கடந்த ஆண்டிலிருந்து இதுவரை 90-க்கும் அதிகமான சாப்பிடும் போட்டிகளில் கலந்துகொண்டு அவற்றில் ஆறு கின்னஸ் சாதனைகளையும் நிகழ்த்தியிருக்கிறார். முக்கால் லிட்டர் ஆலிவ் ஆயிலை 60 வினாடிகளில் குடித்ததும், 17 வாழைப்பழங்களை இரண்டு நிமிடத்தில் முழுங்கியதும் இவற்றில் அடங்கும்.

ஊரைச்சுற்றி வேடிக்கைப் பார்ப்பது பலருக்குப் பொழுதுபோக்காக இருக்கும். கனடாவின் டொரன்டோ மாகாணத்தில் வசிக்கும் பீற்றர் செர்வென்சிக்கோ ஊர் ஊராகப் போய் விதவிதமான உணவு வகைகளை வெளுத்துக்கட்டுவதுதான் முழுநேர வேலையே. இன்னும் ஒரு படி மேலே போய் உணவுகளை அசுர வேகத்தில் சாப்பிட்டு கின்னஸ் சாதனை படைத்துக்கொண்டிருக்கிறார்

## சைக்கிள் தாத்தா!

அவுஸ்திரேலியாவில் டூவோம்பா நகரத்தில் வசிப்பவர் ஜேம்ஸ் மேக் டொனால்ட். இவர் ஒரு சைக்கிள் பிரியர். சைக்கிள் தாத்தா என்ற பெயரில்தான் அங்கே பிரபலம். நூற்றுக்கணக்கான சைக்கிள்களை சேகரித்து வைத்திருக்கிறார். அவற்றை வீடு முழுவதும் அலங்காரப் பொருட்களாக அடுக்கித் தன் வீட்டையே சைக்கிள் வீடாக மாற்றியிருக்கிறார். ஹோல், கிச்சன், பெட்ரூம், பாத்ரூம் வரை எல்லா இடத்திலும் சைக்கிள்கள் மட்டுமே காட்சியளிக்கின்றன.

'தி ஸ்போக்ஸ் மேன்' என்ற பெயரில் இவரைப்பற்றி ஆவணப் படம் வந்திருக்கிறது. 'என்னுடைய வாழ்க்கையில் பாதிநாட்கள் அரியவகை சைக்கிள்களை சேகரிப்பதிலேயே செலவிட்டிருக்கிறேன். இன்னும் தொடர்ந்து சேகரிப்பேன்' என்று தெம்பாகச் சொல்கிறார் தாத்தா. 1890-ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சைக்கிள்களில் இருந்து லேட்டஸ்ட் மாடல் வரை எல்லா கலெக்ஷனும் வைத்திருக்கிறார். யாராவது விருப்பப்பட்டு இவற்றை வாங்க விரும்பினால் விலைக்குக் கொடுக்கவும் செய்கிறார். சைக்கிள் வாங்கிய செலவை விட அதைப் பராமரிக்க அதிகச் செலவு செய்துவிட்டாராம். 'சைக்கிள் எவ்வளவு பழசா இருந்தாலும் என்னுடைய கைபட்டால் பளபளன்னு மின்னும்' என்கிறார் இந்த சைக்கிள் தாத்தா!



## அங்கும் இங்கும்

# சாவச்சேரி பொலிஸ் நிலைய தாக்குதல்


> மனதிற்குக் குறிப்பிட்ட நோக்கம் இல்லையானால் அது எங்கேனும் தாவிக்கொண்டே இருக்கும்.
> -மாண்டெயுள்-

இந்திராகாந்தி இறந்த பின் யாழ்ப் பாணத்தில் நீண்ட நாட்கள் அமைதி நிலவவில்லை. நவம்பர் 9ம் திகதி ஓர் குண்டு வெடித்தது. அதையடுத்து இராணுவம் துப்பாக்கிப்பிரயோகம் செய்த பொழுது 3 போராளிகள் இறந்தார்கள். மறு நாள் மலைநாடான நுவரெலியாவில் தொலைபேசி கோபுரத்தில் உள்ள இராணுவத்தினரை போராளிகள் தாக்கினார்கள். அத் தாக்குதலில் ஒரு இராணுவவீரர் கொல்லப்பட்டார்.


அதை அடுத்து நவம்பர் 19ம் திகதி வடமாகாணத்து கட்டளைத்தளபதியாக இருந்த கேணல் எ. ஆரியப்பெருமா தெல்லிப்பளையில் கண்ணி வெடியில் சிக்கி உயிரிழந்தார். அவருடன் சென்ற 3 இராணுவ உத்தியோகத்தரும் காயமடைந்தார்கள் ஆரியப்பெருமாவுடன் 3 இராணுவத்தினரும் முதல் நாள் விடுதலைப்புலிகளால் தாக்கப்பட்ட பாலத்தினை பார்வையிடச் சென்றிரு ந்தார்கள். அப்பொழுது தான் உயிரிழ ந்தார்கள்.

அன்றைய காலகட்டத்தில் கொலை செய்யப்பட்டு உயிர் இழந்த உயர் இராணுவ அதிகாரி ஆரியப்பெருமாவே ஆகும். அதனை அடுத்து இராணுவ த்தினர் தெல்லிப்பளை பகுதியில் வீடு வீடாக சோதனை செய்யத்தொடங்கினார்கள். அவ்வாறு இராணுவத்தினர் தெல்லிப் பளையில் சோதனை செய்யும் பொழுது ரெலோ போராளிகள் ஒரு பெரிய போராட்டத்தில் குதித்தார்கள். நவம்பர் 2ம் திகதி 2.30 மணிபோல் ஒரு 14 வயதுப் பையன் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தின் முன் காவலரணுக்கு சென்று, தன்னுடைய அடையாள அட்டையை தொலைத்துவிட்டதாக முறைப்பாடு செய்தான். அவ்வாறு முறைப்பாடு செய்யும் போது தான் தங்களின் அடுத்த கட்ட நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று ரெலோவினர் திட்டமிட்டிருந்தனர்.

அந்த முறைப்பாட்டையடுத்து முன்னரங்க பொலிஸ் காவலாளி கதவை திறந்து பையனை உள்ளே செல்ல விட்டான். அப்பொழுது றோட்டில் நாலாபுறமும் இருந்து இராணுவச் சீருடை அணிந்த ரெலோ போராளிகள் துப்பாக்கியினால் சுட்டுக்கொண்டே ஆவேசமாக பொலிஸ்நிலையத்துக்குள் நுழைந்தார்கள். ஒரு பகுதி போராளிகள் பொலிஸ் நிலையத்தில் நுழையும் போது 2வது பகுதி போராளிகளும் பின் தொடர்ந்தார்கள். சில நொடிகளில் பொலிஸ்நிலையம் முற்றுகையிடப்பட்டு துப்பாக்கி சூடுகளும், குண்டு வெடிப்பு களும் காதைப்பிளந்தன.



அதையடுத்து, அந்த 2 மாடி கட்டடத்தில் தான் அந்த பொலிஸ்நிலையம் அமைந்திருந்தது.அதில் இருந்த 40 பொலிஸாரும் நிலைகுலைந்து நின்றார்கள். அவ்வாறு அவர்கள் துப்பாக்கிசூடு நடத்தும் அதே நேரம் இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான ரக் வண்டியை போராளிகள் கடத்திக்கொண்டு வந்திருந்தனர். அந்த வண்டியை பொலிஸ்நிலையத்தில் ஓட விட்டார்கள் அவ்வாறு ரக் வண்டியிருந்து 3 போராளிகள் குதித்து டைனமிற் குண்டுகளை கொழுத்தி வீசினார்கள். அது மாத்திரமன்றி பொலிஸ்நிலைய வளாகத்தில் நின்ற பொலிஸ் வாகனங்களுக்கு மின்சார வயர்களைத் தொடுத்தார்கள் அவ்வாறு செய்த பின் போராளிகள் அவ்விடத்தை விட்டு அகலுமாறு சொல்லிவிட்டு வாகனங்களுக்கு தொடுத்து வைத்திருந்த றிமோல்ட்கொன்றோலை (தொலை இயக்கி) அழுத்தினார்கள். அவ்வாறு அழுத்தியவுடன் பெரிய இடி முழுக்கத்துடன் பொலிஸ்நிலையம் இடிந்து விழுந்து தரைமட்டமாயிற்று. அந்த தாக்குதலில் 24 பொலிஸார் இறந்தார்கள். பொலிஸ்நிலையத்தில் அடைக்கப்பட்டிருந்த 3 பொது மக்களும் இறந்து போனார்கள். அந்த தாக்குதலில் உயிர் தப்பிய ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் இது சம்பந்தமாகக் குறிப்பிடுகையில் தாக்குதலை அடுத்து 60பாடசாலை மாணவர்கள் வெள்ளை சட்டையும், நீல நிற காற்சட்டையும் அணிந்தவர்கள் அங்கு வந்து கட்டட இடிபாட்டுக்குள் இருந்த எல்லா ஆயுதங்களையும் பொறுக்கிச் சென்றார்கள் எனக்கூறினார்.சாவகச்சேரி பொலிஸ்நிலையம் 15நிமிட போராட்டத்தில் தரமட்டமானது. இந்த பொலிஸ்நிலைய தாக்குதல் போராளிகளால் எவ்வளவு தான் கடுமையாக பாதுகாக்கப்பட்ட இடமாக இருந்தாலும் அதை போராளிகலால் தகர்க்க முடியும் என நிரூபித்தனர்.



சாவகச்சேரி பொலிஸ்நிலையத்தின் வெற்றிகரமான தாக்குதல் சென்னையில் உள்ள ரெலோ உறுப்பினர் மத்தியில் பெரும்கொண்டாட்டத்தை ஏற்படுத்தியது. வழமை போல இவ்வாறான தாக்குதலை கண்டிக்கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னனி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் கருத்து தெரிவிக்கையில் ' இராணுவத்தினரும் பொலிஸாரும் தமிழ் இளைஞர்களை கைது செய்து கொன்றும், சித்திரவதையும் செய்து வருகிறார்கள். எனவே தாக்குதல் தான் பாதுகாப்புக்கு சிறந்தது என நினைத்து சில இளைஞர்கள் தான் பொலிஸ்நிலையத்தை தாக்கி இருக்க வேண்டும்," எனத் தன்னுடைய கருத்தை தெரிவித்தார்.

அதே நேரத்தில் நவம்பர் 23மட்டக்களப்பில் கடற்கரையில் வந்திறங்கிய ஒரு தொகுதிப் போராளிகளை இராணுவத்தினர் தாக்கினார்கள். அந்த தாக்குதலில் 5 போராளிகள் இறந்தார்கள். அங்கு 10 ஏ.கே 47 துப்பாக்கிகளும் தானியங்கி துப்பாக்கிகளும் 3000 தோட்டாக்களும் கைப்பற்றினார்கள். அதையடுத்து போராளிகளின் அட்டகாசத்தை முடிவுக்கு கொண்டு வரும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் பல அவசரகால நடவடிக்கைகளை அறிவித்தது. பாராளுமன்றத்தில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் பேசும் போது யாழ்ப்பாணத்தில் வசிக்கின்றவர்களை தற்காலிகமாக நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தங்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் தங்குமாறு ஆலோசனை கூறினார். அப்போது தான் இதை யார் செய்கிறார்கள் என்பதனை அறியமுடியும் என்றார்

அதேநேரம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு அரச பஸ் வண்டிகளில் தான் செல்லமுடியும் தனியார் பஸ் வண்டிகள் மற்றும் மோட்டார் வண்டிகளில் செல்லவும் தடைவிதித்தார்கள். இவ்வாறான அறிவித்தலையடுத்து முல்லைத்தீவு வவுனியா எல்லைப்புறத்தில் சிங்களவர்கள் குடியேறிய இருந்த பதவியா குடியிருப்புகளை போராளிகள் தாக்கினார்கள்.60 சிங்கள பொது மக்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

மேலும் 8கி.மீ தொலைவில் இருந்த குடியிருப்பை தாக்கி 20 பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள். இதுவே இராணுவத்தினர் அல்லாத பொதுமக்களை கொலை செய்த முயற்சியாகும். இந்த குடியிருப்புகளில் முன்னால் மலைநாட்டிலிருந்த தேயிலைத்தோட்ட தமிழ் இந்திய வம்ச குடியிருப்பாளர்கள் குடியமர்த்தினார்கள்.

ஆனால் 1978ம் ஆண்டு காலத்திற்கு பிற்பாடு அந்த தோட்ட தொழிலாளர்களை அவ்விடமிருந்து விரட்டி விட்டு முன்னால்

**அரசகேசரி**

சிறை சென்ற 450சிங்களவரை குடி வைத்தார்கள்.

இந்த பதவியா தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் 2 பஸ் வண்டியில் வந்து தாக்குதலை மேற்கொண்டார்கள் இதனையடுத்து அங்கு வந்த பொலிஸாரும் இராணுவத்தினரும் அப்பகுதியில் இருந்த 30தமிழ் குடிமக்களை சுட்டு கொலை செய்தார்கள்.

### பிரபாகரனின் எதிரி – துரோகி விளக்கம்

பகிரங்கமாக எதிர்ப்பவர்களை எதிரி என்று பிரபாகரன் ஒரு உளவுப்படை அதிகாரியை சந்தித்தபோது கூறினார். அப்பொழுது இவர்களில் யார் உங்கள் எதிரி? யார் உங்களின் துரோகி? என்று கேட்ட பொழுது முன்னாள் ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயராஜபக்ஷ திரு சம்பந்தரும் தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏசியன் ரிபியூன் இணையதள ஆசிரியர் கே.ரி இராஜசிங்கம் ஆகியோரின் பெயரை குறிப்பிட்டு கேட்க அதற்கு பிரபாகரன் பின்வருமாறு கூறினார்.

ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ, பாதுகாப்பு செயலாளர் கோத்தபாயராஜபக்ஷ, ஏசியன் ரிபியூன் இணையதள ஆசிரியர் கே.ரி இராஜசிங்கம் ஆகியோர் பகிரங்கமாக எதிர்க்கும் எனது எதிரிகள் திரு. இராஜசிங்கம் அவர் ஒரு தமிழன் ஆனால் பகிரங்கமாக எதிர்க்கிறார்.ஆனால் சம்பந்தரும், தமிழ் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களும் மன்னிக்க முடியாத துரோகிகள் என்று கூறியதாக அந்த உளவுதுறை அதிகாரி தினச்செய்திக்கு கூறினார்.

# உண்மை வெளிவருகிறது

## பகுதி - 16

**எல்.ரி.ரி.ஈ இயக்கத்தால் படுகொலைசெய்யப்பட்ட சிங்கள மற்றும் முஸ்லிம்கள்**

பெரும் எடுப்பிலான படுகொலை ஆயதத்தைப் பயன்படுத்தி, சிங்கள மற்றும் முஸ்லிம்களை வடக்கு மாகாணத்தில் இருந்து வெளியேற்றுவதில் தமிழ்ப் புலிகள் வெற்றியடைந்தார்கள்.

நவம்பர் 30, 1984 கென்ட பண்ணை, வவுனியா ஆயுததாரி பயங்கரவாதிகள் 29 சிங்கள குடியேற்றவாசிகளை சுட்டுக் கொன்றார்கள், பலர் காயமுற்றார்கள்.

நவம்பர் 30, 1984 டொலர் பண்ணை, வவுனியா ஆயுததாரி பயங்கரவாதிகள் 33 சிங்கள குடியேற்றவாசிகளை சுட்டுக்கொன்றார்கள், பலர் காயமுற்றார் கள்.

மே 14, 1985 அநுராதபுரம் - ஆயுதத-ாரி பயங்கரவாதிகள் நகரத்தின் மீது படையெடுத்து 146 சிங்களவர்களைச் சுட்டுக்கொன்றார்கள், 85 பேர் காயமுற்றார்கள். புனித ஸ்ரீமகா போதி வளாகத்தில் இருந்த யாத்திரீகர்களும் இதில உள்ளடக்கப்படுவர்.

நவம்பர் 7, 1985 நாமல்வத்தை, மெ-ாரவேவா, திருகோணமலை - ஆயுததாரி பயங்கரவாதிகள் 10 சிங்கள கிராமவாசி-களை சுட்டுக்கொன்றார்கள்

மே 25, 1986 மகாதிவுல்வேவா, திருகோணமலை- ஆயுததாரி பயங்கர வாதிகள் 20 சிங்களவர்களைச் சுட்டுக் கொன்றார்கள், 20 வீடுகளுக்குத் தீ வைத்தார்கள்.

ஜூன் 4, 1986 ஆண்டான்குளம், திருகே-ாணமலை - ஆயுததாரி பயங்கரவாதிகள் சங்கைக்குரிய பகமுனே சுபத்தலங்கார தேரோ உட்பட் 17 சிங்கள கிராமவாசி-களை சுட்டுக்கொன்றார்கள்

ஏப்ரல் 20, 1987 ஜயந்திபுரம், திருகே-ாணமலை - ஆயுததாரி பயங்கரவாதிகள் 15 சிங்கள கிராமவாசிகளை சுட்டுக்கொன்றார்கள்

மே 29, 1987 அரந்தலாவ, அம்பாறை ஆயுததாரி பயங்கரவாதிகள் 10 பிக்குகளை யும் 4 சிங்கள சிவிலியன் களையும் சுட்டுக்கொன்றார்கள் 15 பிக்குகள் காய முற்றனர்.

ஜூன் 2, 1987 அரந்தலாவ, அம்பாறை - 33 இளம் பிக்குகள் மற்றும் அவருடைய வழிகாட்டி நெறியாளர் தலைமை மதகுரு சங்கைக்குரிய ஹேகொட இந்திரதாஸ தேரோ குருதி தோய்ந்க படுகொலை மற்றும் கொடூரமான அவயவ துண்டிப்புகள்.


அக்டோபர் 6, 1987 மட்டக்களப்பு ஆயுததாரி பயங்கரவாதிகள் 15 சிங்களவர் களை சுட்டுக்கொன்றார்கள்.

அக்டோபர் 6, 1987 சகராபுரம், குச்சவெளி, திருகோணமலை - ஆயுததாரி பயங்கரவாதிகள் 27 சிங்கள கிராமவாசி-களை சுட்டுக்கொன்றார்கள்

அக்டோபர் 6, 1987 தளவை, ஏறாவூர் - ஆயுததாரி பயங்கரவாதிகள் 10 சிங்கள கிராமவாசிகளை சுட்டுக்கொன்றார்கள்.

டிசம்பர் 31, 1987 ஆயுததாரி பயங்கரவாதிகள் 10 கிராமவாசிகளை சுட்டுக்கொன்றார்கள் 15 வீடுகளுக்கு தீ வைத்தார்கள்.

மார்ச் 2, 1988 மொரவேவா, திருகே-ாணமலை - ஆயுததாரி பயங்கரவாதிகள் 14 சிங்கள கிராமவாசிகளை சுட்டுக்கொன் றார்கள்.




மார்ச் 14, 1988 கம்லெட்டியாவ, கந்தளாய், திருகோணமலை ஆயுததாரி பயங்கரவாதிகள் 13 சிங்கள கிராமவாசி-களை சுட்டுக்கொன்றார்கள்.

மார்ச் 15, 1988 கிவுல்கடே, திருகே-ாணமலை - பயங்கரவாத இரண்டு குழுக்கள் கிராமத்துக்குள் புகுந்து 7 சிங்கள கிராமவாசிகளை கொன்றார்கள்.

மார்ச் 22, 1988 பண்டுக்குளம், வவுனியா - 10 முதல் 15 வரையான ஆயுததாரி பயங்கரவாதிகள் சிங்கள கிராமத்தைத் தாக்கி 6 கிராமவாசிகளை கொன்றார்கள் மூவர் காயமுற்றார்கள்.

மார்ச் 22, 1988 மதவாச்சிகுளம், வவுனியா - ஆயுததாரி பயங்கரவாதிகள் 9 சிங்கள கிராமவாசிகளை சுட்டுக்கொன்றார்கள்.

ஆகஸ்ட் 3, 1990 காத்தான்குடி - ஆயுதம் தாங்கிய ப்யங்கரவாதிகள் புனித மசூதியிலுள்ள முஸ்லிம் பிரார்த்தனை மண்டபத்தின் மீது திடீர்த் தாக்குதலை நடத்தி 25க்கும் அதிகமான சிறுவர்கள் உள்ளடங்களாக 103 பேரை வெட்டிக்கொன்றார்கள்.

ஆகஸ்ட் 7, 1990 பண்டாரதுவ உஹன, அம்பாறை - சுமார் 40 ஆயுததாரி பயங்கரவாதிகள் சிங்கள கிராமத்திற்குள் சென்று, 30 பேரைக் கொன்றார்கள் நான்கு பேர் காயமுற்றார்கள்.

அக்டோபர் 15 - 30, 1990 வடக்கில் இருந்து முஸ்லிம்கள் பெரும் எண்ணிக்கையில் வெளியேற்றம்.

ஆகஸ்ட் 19, 1991 பள்ளியாகொடெல்ல, பொலன்னறுவை - பயங்கரவாதிகள் முஸ்லிம் கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தி 13 பேரைக் கொன்றார்கள் ஆறு பேர் காயமுற்றார்கள்.

ஏப்ரல் 29, 1992 அளிஞ்சிபொத்தான, பொலன்னறுவை - பயங்கரவாதிகள் கிராமத்தைத் தாக்கி 56 முஸ்லிம்களைக் கொன்றார்கள் 15 பேர் காயமுற்றார்கள்.

அக்டோபர் 15, 1992 பள்ளியாகொ டெல்ல,அஹமெத்புர, அகபோபுர, பம்புரான மற்றும் பொலன்னறுவை - சுமார் 200 - 300 ஆயுததாரி பயங்கரவாதிகள் முஸ்லிம் கிராமங்களைத் தாக்கி, சுட்டும் வெட்டியும் 172 சிவிலியன்களையும் (இவர்களில் 171 பேர் முஸ்லிம்கள்) 12 பொலிசாரையும் 8 சிப்பாய்களையும் கொன்றார்கள் 83 பேர் காயமுற்றார்கள்.

செப்டம்பர் 18, 1999 கல்பெனகல மற்றும் பெடிறெக்க, அம்பாறை - பயங்கரவரிகள் மூன்று கிராமங்களில் உள்ள 17 பெண்கள் மற்றும் ஏழு சிறுவர்கள் உட்பட 61 சிங்கள கிராமவாசிகளை படுகொலை செய்தார்கள். நித்திரையில் இருந்தவர்கள் இழுத்துச்செல்லப்பட்டு, வெட்டுக்கத்திகள் மற்றும் வாள்கள் பயன்படுத்தப்பட்டு, வெட்டிக் கொல்லப்பட்டார்கள். அந்தச் சமயத்தில் அவர்களில் சிலர் படுக்கையில் இருந்தார்கள்.

மே 29, 2006 ஒமதியாமடு, வெலிகந்த புலிகளினால் நடத்தப்பட்டதாகக் கூறப்படும் தாக்குதலில் இருவர் மரணத்தில் இருந்து தப்பிய அதேவேளை, 12 தொழிலாளிகள் கொல்லப்பட்டார்கள். ஒப்பந்தக்காரர் ஒருவரினால் மகாவலி அதிகாரசபைக்காக பொறுப்பெடுக்கப்பட்ட நீர்ப்பாசன கால்வாய் நிர்மாணத் திட்டம் ஒன்றில் பணிவேலையில் அவர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

ஜூன் 15, 2006 கெப்பித்திகொலாவ 15 பாடசாலை சிறுவர்கள், பல கர்ப்பிணிப் பெண்கள், புத்த பிக்கு ஒருவர் மற்றும் பல சிவிலியன்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.

ஆகஸ்ட் 3, 2006 மூதூர்-பலத்த பீரங்கித் தாக்குதலுடன் கிழக்கில் உள்ள மூன்று பாடசாலைகள் குண்டுத் தாக்குதலுக்கு இலக்காக்கப்பட்டன. இந்த அகதி முகாம் நிலையங்கள் பெரும் எண்ணிக்கையில் தஞ்சம் அடைந்திருந்த துரதிட்சவசமான அப்பாவி முஸ்லீம் சமூகத்திற்கு அதிகபட்ச சேதத்தை ஏற்படுத்துவதே எல்.ரி.ரி.ஈ இயக்கத்தின் தெளிவான உத்தேசமாகும்.


ஏப்ரல் 5 மற்றும் 12, 2007 அரலகன்வில மற்றும் பலேயொறுவ, அவற ன்துலாவ, வவுனியா - எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் 6 பெண்களையும் ஆண் ஒருவரையும் கொன்றார்கள் வேறு சிலர் காயமுற்றார்கள். பாதுகாப்பு வட்டாரங்களின் படி, பயங்கரவாத ஆயுதக் குழு ஒன்று பிற்பகல் 4.30மணியள வில் முற்றுகையிட்டு, இரண்டு வீடுகளில் இருந்த இரண்டு குடும்பங்களை கொன்று குவித்தது. ஏற்கனவே, எல்.ரி.ரி.ஈ பயங்கரவாதிகள் அரந்தலாவையில் நான்கு சிவிலியன்களைக் கொன்றார்கள்.

டிசம்பர் 5, 2007அபிமன்புர, கெப்பித் கொலாவ - இன்னுமொரு பாரிய குண்டு சிவிலியன் பஸ் வாகனத்தை இலக்குவைத்தது. 16 பேர் மரணம் 23 பேர் காயமுற்றனர்.

ஜனவரி 16, 2008 ஒக்கம்பிட்டிய, மொனராகலை பாடசாலைச் சிறுவர்கள் படுகொலை. 28 பேர் கொல்லப்பட்டனர் 64 பேர் காயமுற்றனர்.

பெப்ரவரி 21, 2009 அம்பாறை, இங்கினியாகலவிலுள்ள கிரிமெட்டிய, ரத்மல்கஹ எல்லே எல். ரி. ரி. ஈ பணிநிலையாளர்கள் சிங்களவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட கிராமத்தை முற்றுகையிட்டு, விவசாயசமுதாயத்தவர்கள் மீதுகண்மூடித் தனமான துப்பாக்கிப்பிரயோகத்தை நடத்தினர். 21 பேர் கொல்லப்பட்டனர் சிறுவர்கள் உட்பட வேறு 20 பேர் காயமுற்றனர்.

(தொடரும்)




## வாரமொரு குறள்

*குறள் 33:*

*ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே*
*செல்லும்வாய் எல்லாஞ் செயல்.*

**பொருள் :**

செய்யக் கூடிய செயல்கள் எவை ஆயினும் அவை எல்லா இடங்களிலும் தொய்வு இல்லாத அற வழியிலேயே செய்யப்பட வேண்டும்.



ஒரேஞ்சில் 600 வகைகள் உண்டு. ஒரேஞ்மரம், 33 அடி உயரம்வரை வளரக்கூடியது. 50 வருடங்கள் வரை வாழும். வாழ்நாளில் 60,000 மலர்கள் வரை பூக்கும்.

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தின் மலராக வெண்மை நிற ஒரேஞ் மலர் உள்ளது. இந்த வெண் பூக்கள் விழாக்களில் அலங்காரத்திற்கும், திருமணச் சடங்குகளில் தலையில் கிரீடமாகவும் சூட்டப்படுகிறது. நறுமணம் மிக்க இந்தப் பூவில் இருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கப்படுகிறது.

# கடவுளின் பழம்

தோடம் பழத்துக்குத்தான் (Orange) கடவுளின் பழம் என்னும் பெருமை! தோடம்பழத்தில்அதிக அளவில் பழச்சாறாகப் (Juice) பயன்படுத்தப்படுகிறது. ஜாம், ஊறுகாய், மிட்டாய் போன்ற பொருட்கள் தயாரிப்பிலும் உதவுகிறது. இதில் அதிக அளவில் விற்றமின் சி உள்ளது. இது சிட்ரிக் அமிலம் நிறைந்தது.


ஒரேஞ் என்ற வார்த்தை நாரங்கா (Naranga) என்ற சமஸ்கிருத வார்த்தையில் இருந்து வந்தது. நாரங்காயின் மூலச் சொல், நார்த்தங்காய் என்ற தமிழ்ச் சொல்லாக இருக்கலாம் என்கிறார்கள்.

இதன் தோல் மருந்துப் பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒரேஞ் அஜீரணத்தை சரி செய்யும். இதற்கு, 'தங்க அப்பிள்' என்றும் ஒரு செல்லப் பெயர் உண்டு.

பிரேசில், அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் ஒரேஞ் விளைச்சல் செய்வதில் முதன்மையான இடங்களை வகிக்கின்றன.




# மலையுச்சியில் ஆராய்ச்சி நிலையம்




அண்டவெளியைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் அறிவியல் அறிஞர்களே வானியல் நிபுணர்கள் ஆவர். அவர்களில் பலர் நட்சத்திரங்களையும், கோள்களையும் பற்றி ஆராய்ச்சி செய்ய ஆராய்ச்சி நிலையங்களை மலை உச்சியில் கட்டுகிறார்கள். ஏன் மலை உச்சியில் கட்ட வேண்டும், கீழே கட்டினால் ஆராய்ச்சி செய்ய முடியாதா என்று கேட்கலாம். காரணம் வருமாறு:

எமது கோள் - அதாவது, பூமியைச் சுற்றி ஒரு காற்று மண்டலம் உள்ளது. அந்த மண்டலம் ஒளியையும், சில கதிர் வீச்சுக்களையும் பூமிக்கு அனுப்பி எமது வாழ்வைக் காக்கிறது. ஆனால் காற்று மண்டலம் அதிக தூசையும், மேக மூட்டத்தையும் கொண்டுள்ளதால், சூரியன் மற்றும் நட்சத்திரங்களிலிருந்து வரும் கதிர்வீச்சை பூமிக் குள் விடுவதில்லை.

நட்சத்திரங்களைப் பற்றி தெளிவாக அறிந்து கொள்ள வானியல் நிபுணர்கள் விரும்புகின்றனர். இதனால் வானியல் நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சிக் கூடங்களை மலை உச்சியில் கட்டுகிறார்கள். இதனால் அவர்களுடைய பார்வையை மறைக்க குறைந்த எண்ணிக்கையிலான காற்று அடுக்குகளே உள்ளன. வானியல் நிபுணர்கள் துணைக்கோள்களோடு இணைந்த தொலைநோக்கியையும் உபயோகப்படுத்துகின்றனர். துணைக்கோள்கள் காற்று மண்டலத்திற்கு மேலே சென்று சுழல்வதால் அவை தெளிவான படங்களை அனுப்புகின்றன.



# குறுக்கெழுத்துப் போட்டி - 6

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | ⊠ | 3 |
| | ⊠ | ⊠ | 4 | | |
| ⊠ | 5 | 6 | ⊠ | ⊠ | |
| 7 | | | 8 | ⊠ | |
| ⊠ | 9 | | | | ⊠ |
| 10 | ⊠ | ⊠ | 11 | ⊠ | 12 |

**இடமிருந்து வலம்**

1. இம்முறை ஒலிம்பிக் நடைபெறும் நாடு.
4. பூவில் இருப்பது.
5. பாம்புக்கு இதில் விஷம்.
7. செய்தி
9. நம் நாட்டு மதிய உணவு. (குழம்பியுள்ளது)
10. முக்கனிகளில் ஒன்று.

**மேலிருந்து கீழ்**

1. முஸ்லிம்கள் இதைப் பார்த்து ரம்ழான் நோன்பை ஆரம்பிப்பார்கள்.
2. நாய் இதன் மூலம் நன்றியை வெளிப்படுத்தும் (தலைகீழ்)
3. தீயில் எரிந்தால் இது மிஞ்சும்.
5. கேள்விக்கு கிடைப்பது.
6. நெருப்பு (தலைகீழ்)
8. காடு (தலைகீழ்)
12. சுவை அறிவது.

### குறுக்கெழுத்துப்போட்டி - 3 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

2. வடை
3. லைலா
6. பகிடிவதை
10. கரை
11. அகம்
12. தீ

**மேலிருந்து கீழ்**

1. மாலை
2. வட்டி
4. பலா
5. விதை
7. கிளி
8. வடகம்
9. அகதி

### சரியான விடையை எழுதியவர்கள்

1. த. மணிவண்ணன், மேபீல்ட் வீதி, கொட்டாஞ்சேனை.
2. சோ. கலைவாணி, நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
3. மு. சந்திரவதனி, வட்டக்கச்சி, கிளிநொச்சி.
4. தி. முகுந்தன், வேலணை, 2ஆம் வட்டாரம்.
5. சு. சாந்தினி, பருத்தித்துறை வீதி, நெல்லியடி.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜூன் 23 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 25.06.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 6**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# நடிக்கப் பயந்த அனுஷ்கா

சல்மான் கான் - அனுஷ்கா ஷர்மா நடித்திருக்கும் 'சுல்தான்' படத்தின் ட்ரெய்லர்தான் கடந்த வார யு-ட்யூப் வைரல். “முதலில் நான் சுல்தானில் நடிக்கப் பயந்தேன். காரணம், என்னைப் பார்த்தால் ஒரு மல்யுத்தப் போட்டியில் ஜெயிப்பவரைப்போல இல்லை என்பதுதான். பிறகு என்னைப் போன்ற பலரும் மல்யுத்தத்தில் இருப்பதைப் பார்த்த பிறகுதான் எனக்கு நம்பிக்கை வந்தது. ஒருவழியாக இப்போது நானும் மல்யுத்த வீராங்கனை ஆகிவிட்டேன்“ என உற்சாகமாகிறார் அனுஷ்கா ஷர்மா.



# அவரா இவர்

தமிழில் சந்தானத்துடன் நடிச்ச சந்தியா எப்படி 'பிரேமம்' படத்துல நிவின்பாலிக்கு ஜோடியா நடிச்சாங்க? ஆரம்பத்துல நெஞ்சு பதறிடுச்சு. அப்புறம்தான் அது சந்தியா இல்ல, கிட்டத்தட்ட அவங்க மாதிரியே இருக்கிற மடோனா என்று தெரிஞ்சுது. அந்த கேப்புல, தமிழில் வந்த 'காதல்' படத்தைத் தான் மலையாளத்தில் 'ப்ரேமம்' என்ற பெயரில் ரீமேக் பண்றாங்களோ என்று குதர்க்கமா வேற யோசிச்சேன் பாஸ்.






# நயனுடன் இணைய வாய்ப்பில்



நீண்ட இடைவேளைக்கு பின்னர் சிம்பு-நயன்தாரா ஜோடி மீண்டும் இணைந்து நடித்த “இது நம்ம ஆ திரைப்படம் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற் பெற்ற நிலையில் இந்த படத்தின் வெற்றியால் சிம்பு மிகுந்த உற்சாகத்தில் உள்ளார். சமீபத்தில் சமூக இணையதளத்தில் ரசிகர்களின் கேள்விக்கு பதில் அளித்த சிம்பு “இது நம்ம ஆளு“ படத்தின் கிளைமாக்ஸ் போல நயனுடன் மீண்டும் சொ வாழ்வில் இணைய வாய்ப்பில்லை என்றும் ஆனால் சினிமாவில் அவருடன் தொடர்ந்து நடிப்பதில் தனக்கு எந்த பிரச்சினையும் இல் என்றார். விரைவில் சிம்பு நடிக்கவுள்ள “அன்பானவன் அசராதவன் அடங்காதவ படத்தின் மூன்று நாயகிகளில் ஒருவராக நயன்தாரா நடிக்க வாய்ப்பு உள்ளது என் கூறப்படுகிறது.

# படிப்புக்கு முழுக்கு போட்ட நடிகை



சினிமா மற்றும் படிப்பு ஆகிய இரண்டையும் இதுவரை பலன்ஸ் செய்து வந்த நடிகை லட்சுமி தற்போது ஏதாவது ஒன்றை இழக்க வேண்டிய நிலையில் உள்ளார். பள்ளியில் படிக்கும்போது இஷ்டம்போல் படப்பிடிப்பிற்காக விடுமுறை எடுத்துகொண்ட லட்சுமிமேனன் தற்போது கல்லூரியில் சேர்ந்த பின்னர் விடுமுறை எடுக்க முடியவில்லை. கல்லூரி நிர்வாகம் ரொம்ப ஸ்ட்ரிக்ட் ஆக இருப்பதால் நடிப்பு அல்லது படிப்பு ஏதாவது ஒன்றை தொடர முடிவு செய்தார். லட்சக்கணக்கில் சம்பளம் கிடைக்கும் சினிமா தொழிலை கைவிட அவரது மனம் இடம் கொடுக்காததால் கல்லூரிக்கு முழுக்கு போட்டுவிட்டு நடிப்பையும் தொடர லட்சுமிமேனன் முடிவு செய்திருப்பதாக கூறப்படுகிறது. அதே நேரத்தில் படிப்பையும் தபால்மூலம் தொடரவுள்ளாராம்.



# நான் இப்போ

…டத்துல
… பதறிடுச்சு.
…திரியே
…ழில் வந்த
…பெயரில்
…சன் பாஸ்.



# விஜய் எடுக்கும் புதிய முயற்சி

தெறி படத்தின் மாபெரும் வெற்றியைத் தொடர்ந்து விஜய், பரதன் இயக்கும் பெயரிடப்படாத படத்தில் நடித்து வருகிறார். இப்படத்தில் விஜய்க்கு ஜோடியாக முதல்முறையாக கீர்த்தி சுரேஷ் நடித்து வருகிறார். இப்படத்தின் கதை திருநெல்வேலியை சுற்றியுள்ள கிராமங்களை பின்னணியாக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எனவே இப்படத்தில் விஜய் நெல்லை வட்டார மொழியில் பேசவுள்ளார். இதற்காக தற்போது முதலே அவர் நெல்லை மொழியில் பேசி பயிற்சி எடுத்து வருகிறார். அந்த மொழியை சரியா பேசுனாதான் அந்த பாத்திரத்துக்கு பலம் என்று முறையாக கற்றுவருகிறார்.



# இனி குத்தாட்டம் தான்

ஹாலிவுட்டில் வெற்றிகரமாக ‘ட்ரிபிள் எக்ஸ்’ படத்தை முடித்துவிட்டு வந்திருக்கும் தீபிகா படுகோன், இந்திப் படங்களில் நடிக்கக் கதை கேட்டு வருகிறாராம். முன்னதாக ஒரு குத்தாட்டம் போட்டு இந்தி சினிமாவுக்கு தன்னை தயார்படுத்திக்கொள்ள முடிவெடுத்திருக்கிறாராம். இதைக் கேள்விப்பட்டு பலர் முண்டியடிக்க, கடைசியில் அதிர்ஷ்டம் சுஷாந்த் சிங் ராஜ்புத், கீர்த்தி சனோன் நடிக்கும் ‘ரஃப்தா’ படத்துக்குக் கிடைத்திருக்கிறது.



# …ப்பில்லை

…ம்பு-நயன்தாரா
…இது நம்ம ஆளு“
…ல்ல வரவேற்பை
…ற்றியால் சிம்பு
…த்தில் சமூக
…விக்கு பதில்
…படத்தின்
… மீண்டும் சொந்த
…ல்லை என்றும்
…ன் தொடர்ந்து
…சினையும் இல்லை“
…க்கவுள்ள
… அடங்காதவன்“
…ரில் ஒருவராக
… உள்ளது என்றும்



# அஞ்சு தடவைக்கு மேல போடமாட்டேன்!

தமிழ்நாட்டில் பலர் வீட்டு ரிமோட்டுக்கும் செல்லம்... டிடி என்கிற திவ்யதர்ஷினி. சுவாரஸ்யமான நிகழ்ச்சித் தொகுப்பு, ரசிக்கவைக்கும் முகபாவங்களுடன், வியக்கவைக்கும் காஸ்ட்யூம்ஸ்ும் அவர் பலம். விலை உயர்ந்த டிரெஸ்தான் போடுவேங்கிறது எல்லாம் இல்ல. சொல்லப்போனா, டிரெஸ்ஸுக்கு அதிகமா செலவழிக்கிறது எனக்குப் பிடிக்காது. 300 ரூபாய் டிரெஸ்ஸா இருந்தாலும், எனக்குப் பிடிச்சிருந்தா வாங்கிப் போட்டுப்பேன். லோக்கல் அயிட்டம்னாலும், அதை மனசுக்குப் பிடிச்சுப் போடும்போது கிடைக்கிற திருப்தி, எவ்ளோ காஸ்ட்லி டிரெஸ் போட்டாலும் கிடைக்காது! ஒரு டிரெஸ்ஸை அதிகபட்சம் அஞ்சு தடவைதான் போடுவேன். அது நல்ல கண்டிஷன்ல இருக்கும்போதே, யாருக்காவது கொடுத்துடுவேன்!



# …இப்போ ஹீரோயின்!”

‘பீட்ஸா’, ‘காஞ்சனா’, இப்போது ‘களம்’ என தொடர்ந்து ஹொரர் படங்களாக மிரட்டுகிறார் எஸ்.எஸ் மியூஸிக் பூஜா! “அதானே இப்போ ட்ரெண்ட்... அதனால நடிச்சேன். ஆனா, இனிமே நோ ஹொரர் படம். அடுத்து மூணு படங்களில் நடிச்சிட்டு இருக்கேன். அதில் ரெண்டு படங்களில் கேரக்டர் ரோல், ஒரு படத்தில் ஹீரோயின் ரோல். என்னைப் பொறுத்தவரைக்கும் கதைதான் ஹீரோ, ஹீரோயின் எல்லாம். நான் விஜே யாக இருந்தப்போ நிறைய ஹீரோயின் சான்ஸ் வந்தது. அப்போ நான் வேண்டாம்னு தவிர்த்த படங்கள் எல்லாம் சூப்பர் டூப்பர் ஹிட். மிஸ் பண்ணிட்டோமேனு அப்புறம்தான் தோணுச்சு. இருந்தாலும் அப்போ எஸ்.எஸ். மியூஸிக் பூஜாவா இருந்ததும் செம கிரேஸ்தான். சினிமாவும், பயணங்களும்தான் இந்த நிமிஷம் பிடிச்ச விஷயங்களா இருக்கு. தனியா கிளம்பி நாடு நாடா ஜாலி டூர் போயிட்டு இருக்கேன்.




# ஜீன்ஸுக்கேற்ற டொப்ஸை தெரிவது எப்படி?



புடவையும், தாவணியும் தான் பெண்களின் உடை என்று இருந்த காலத்தில், வாகனம் ஓட்டுபவர்களுக்கும், வேலைக்குச் செல்பவர்களுக்கும் வரப்பிரசாதமாக வந்தது தான் சுடிதார். சுடிதாருக்கு இன்றல்ல நேற்றல்ல எப்போதுமே மவுசு அதிகம் தான். தாவணியை முற்றிலுமாக மறந்து சுடிதாருக்கு வந்த பெண்கள் படிப்படியாக ஜீன்ஸ் டி-சேர்ட்டிற்கு மாறினர். எங்கு பார்த்தாலும் சுடிதார் கடைகளும், ஜீன்ஸ் கடைகளும் என காட்சி அளித்தன. அங்கு தான் பெண்களின் கூட்டம்.

தற்போது ஜீன்ஸுக்கேற்ற டொப்ஸ்கள் கிடைக்கின்றன. முழுவதும் வேலைப்பாடு செய்யப்பட்டது, கை மற்றும் கழுத்துப் பகுதியில் மட்டும் வேலைப்பாடு செய்யப்பட்டது, ஜிமிக்கி, மணிகள் வைத்து தைக்கப்பட்ட டொப்ஸ் என இது நீண்டு கொண்டே செல்லும். பொதுவாக ஒல்லியாக இருக்கும் பெண்கள் தங்களது உடல் அளவிற்கு ஏற்ற சிறிய டொப்ஸ்கள் அல்லது சேர்ட்டுகளை தேர்ந்தெடுக்கின்றனர். மென்மையான நிறங்களில் அது போன்ற சட்டைகளை எடுத்து கருப்பு, அடர்ந்த நீலம் போன்ற ஜீன்ஸ் பான்ட்டுகளுக்கு அணியலாம். அல்லது சட்டையை விடக் கொஞ்சம் நீளம் கூடுதலாக வரும் டொப்ஸ்களும் உள்ளன. அவற்றில் பல்வேறு விதங்களில் பல விலைகளிலும் கிடைக்கின்றன. எடுப்பான தோற்றம் கொண்டவர்கள் இது போன்ற டாப்ஸ்களை வாங்கும் போது அதற்கேற்ற வலைப் பின்னல் ஷோல்களையும் வாங்கி அணிந்து கொள்வதும் ஒரு பேஷன் ஆகிவிட்டது. கை நீளம், கைக் குட்டையானது அல்லது கையே இல்லாத டொப்ஸ்களில் உங்கள் தோற்றத்திற்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.

ஆடை உங்களது உடல் அளவுக்கும், உடல் நிறத்திற்கும் ஏற்றதாகவும், பார்ப்பவர்களை முகம் சுளிக்க வைக்காமலும் இருப்பது நலம். உடல் அதிக பருமன் கொண்டவர்கள் நீண்ட டொப்ஸ்களையும், அதற்கு மேல் ஒரு ஷோலையும் அணிவது உங்களை அழகாகக் காட்டும். ஒல்லியான உடல் அமைப்பைக் கொண்டவர்கள் அதிக வேலைப்பாடு கொண்ட டொப்ஸ்களை அதிகம் அணியலாம்.




**கேக் செய்யும் போது அதன் மேற்பகுதி வெடித்து காணப்படுகிறதே?**

சேர்க்க வேண்டிய அளவை விட அதிகமாக பேக்கிங் பவுடரைச் சேர்த்தால், கேக்கின் மேற்பகுதி வெடித்து விரிந்து விடும். எனவே, கேக் தயாரிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள அளவுகளில் மட்டுமே பேக்கிங் பவுடரைச் சேர்க்க வேண்டும்.

**குழிப் பணியாரம், அப்பம் போன்றவற்றை சோடா உப்பு சேர்க்காமல் எவ்வாறு மிருதுவாகத் தயாரிக்கலாம்?**

குழிப்பணியாரத்துக்கு வெந்தயம், உளுந்து, அரிசி மற்றும் சிறிது ஜவ்வரிசியையும் சேர்த்து ஊற வைத்து அரைத்து புளிக்க வைத்துக் கொள்ளவும். இதன் பிறகு குழிப்பணியாரம், அப்பம் செய்தால், சோடா உப்பு போட்டது போல் மிருதுவாக இருக்கும்.

**ஃப்ரிட்ஜை எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாலும், ஏதாவது ஒரு வாசனை வருகிறதே அது ஏன்?**

ஒரு எலுமிச்சைப் பழத்தை இரண்டாக நறுக்கி, ஃப்ரிட்ஜில் வைத்தால், எந்த வித வாசனையும் வராமல் தவிர்க்கலாம்.

**ஃப்ரிட்ஜில் ஃப்ளாஸ்டிக் பைகளில் போட்டு வைக்கும் காய்கறிகள் தண்ணீர் விட்டு அழுகி விடுகிறதே ஏன்?**

காய்கறிகளை துணிப்பையிலோ அல்லது வலை போன்ற பைகளிலோ போட்டு வைத்தால், காய்கறிகள் அழுகாமல் பாதுகாக்கலாம்.

# பூச்சி மருந்து அனைவருக்கும் அவசியமா?



வீட்டில் யாருக்காவது வயிற்றுவலியா? சருமத்தில் திடீர் அரிப்பா? பசியே இல்லை என்கிறார்களா? பூச்சி மருந்து கொடுத்துப் பார்க்கச் சொல்லி பெரியவர்கள் அறிவுறுத்துவதைக் கேட்டிருப்போம். யாருக்கு பூச்சி மருந்துகள் அவசியம்? ஏன் அவசியம்? எத்தனை நாட்களுக்கொரு முறை எடுத்துக் கொள்ள வேண்டும்?

"குழந்தைகளை பாதிக்கக்கூடிய ஒரு முக்கியமான பிரச்சினை குடற்புழுத் தொல்லை. அசுத்தமான இடங்களிலும், மண் தரையிலும், தண்ணீரிலும் விளையாடுவது, அழுக்கடைந்த பொம்மைகளுடன் விளையாடுவது, குழந்தைகளும் பெரியவர்களும் காலில் செருப்பு அணியாமல் நடப்பது, உணவு சாப்பிடுவதற்கு முன் கைகளைக் கழுவிச் சுத்தப்படுத்தத் தவறுவது, சமையலுக்கு முன் காய் கறிகளைக் கழுவிச் சுத்தம் செய்யத் தவறுவது போன்ற சுகாதாரமற்ற பழக்கங்களே குடற்புழு ஏற்படுவதற்குக் காரணமாகின்றன.

பூச்சிகள் இருந்தால், சரியாக சாப்பிடாமல் மெலிந்து, நிறம் வெளிறி காணப்படுவார்கள்.

சிலருக்கு வறட்டு இருமல், இளைப்பு மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படலாம். தெருவோர உணவகங்களில் கைகளால் நேரடியாக உணவு பரிமாறப்படுவதால் அமீபியாசிஸ் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகிறது. இந்தத் தொற்று ஏற்பட்டவர்கள் சாப்பிடுவதற்கு முன்னும்பின்னும் வயிற்றுவலியால் அவதிப்படுவார்கள்.

அடிக்கடி மலம் கழிக்க வேண்டியது போல உணர்வார்கள். குடற்புழுத் தொற்று ஏற்பட்ட குழந்தைகளுக்கு சருமத்தில் வெள்ளைத்திட்டுகள் தோன்றி அரிப்பு ஏற்படும். சில புழுக்கள் ஆசனவாயில் முட்டை இடுகின்றன. இதனால், அந்த இடத்தில் இரவில் அதிக அரிப்பு ஏற்படும். அறியாமல் சொறிந்து கொண்டு, அதே கைகளை குழந்தைகள் வாயில் வைக்கும்போது, பூச்சி கள் மீண்டும் உடலுக்குள் செல்வது ஒரு தொடர் சுழற்சியாகவே நடைபெறும்.

கொக்கிப்புழு நாளொன்றுக்கு 0.2 மி.லி. ரத்தத்தை உறிஞ்சிவிடும். இதனால் இந்தப் புழு தாக்கியுள்ள நபருக்கு வயிற்றுப் பிரச்சினைகளோடு இரத்தசோகை நோயும் ஏற்படும். இரத்தச்சோகை, சோர்வு, வெளிறிய முகம் போன்ற அறிகுறிகள் தோன்றும் போது பெரியவர்களும் மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். குடற்புழுவை ஒழிக்கப் பெரியவர்களுக்கு மாத்திரைகளும், குழந்தைகளுக்குத் திரவ மருந்தும் கொடுக்கப்படுகிறது.

பல வகைப் புழுக்கள் இருப்பதால், மேற் கூறிய அறிகுறிகள் இருப்பவர்கள் எந்தப் புழுவின் பாதிப்பு உள்ளது என்பதை மலப் பரிசோதனை மூலம் தெரிந்து கொண்டு, அதற்கேற்ப மருத்துவர் கூறுவது போல குடற்புழு நீக்கம் செய்து கொள்ள வேண்டும். 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு 6 மாதங்களுக்கு ஒரு முறை மருந்து கொடுக்க வேண்டும். மற்றவர்களைக் காட்டிலும், அதிகமாக தெருவோர கடைகளில் சாப்பிடுபவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குடற்புழு நீக்கம் செய்து கொள்வது மிகமிக அவசியம்.

. அவரவர் வயதுக்கேற்றபடியும், நோய் அறிகுறிகளுக்கு ஏற்றவாறும் மருந்துகளும் அளவும் மாறுபடும் என்பதால் மருத்து வரின் ஆலோசனைப்படியே மருந்து எடுத்துக் கொள்ள வேண்டும். மாறாக தாங்களாகவே மருந்துக் கடைகளில் கிடைக்கும் De-worming மருந்துகளை எடுத்துக்கொள்ளக் கூடாது. மேற்கூறிய முறைகளை தவறாமல் கடைபிடித்தால் குடற்புழுக்கள் 100 சதவிகிதம் அழிந்துவிடும். புழுக்கள் அழியும்போது தானாகவே சருமத்தில் ஏற்பட்ட வெள்ளைத் தழும்புகள், தடிப்புகள் போன்றவையும் மறைந்துவிடும்".

# வரலாற்று சிறப்புமிக்க முன்னேஸ்வரம்



கே. லிங்கநாதன்

பஞ்ச ஈஸ்வரங்கள் எனப் போற்றப்படுகின்ற ஸ்ரீ முன்னேஸ்வரம் வடமேல் மாகாணத்தில் சிலாபம் நகரில் நெய்தல் நிலத்திற்கே உரித்தான இயற்கை வனப்புகள் அனைத்திற்கும் மத்தியில் அமைந்துள்ளது. சிலாபம் - குருநாகல் பிரதான வீதியில் 2 கி.மீ தொலைவில் கிழக்குப் புறம் முன் வாசல் கோபுரத்துடன் கம்பீரமாக காட்சி தந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கின்றது இந்த திருத்தலம். மேற்கே சிலாபம் நகரை ஒட்டியதாக ஆர்ப்பரிக்கும் இந்துமகா சமுத்திரமும் கிழக்கே கோயிலுக்கு எதிரேயுள்ள ஆம்பல், அல்லி, தாமரை மலர்களும் நிறைந்த பெரிய குளமும் பசும் பொன் பாய் விரித்தது போல் இருமருங்கிலும் படுக்கையாய் பரந்து விரிந்து கிடக்கும் வயற் பரப்புக்களும் நீர் நிலைகளும் நீர்த் தாவரங்களும் நெடிந்துயர்ந்து மரங்களுமாக நெய்தல் நிலத்திற்கே உரிய அழகும் இனிமையும் நிறைந்த கோயிலை சுற்றி பூஜைப் பொருட்கள் விற்பனை செய்தல் கடைகளும் இறைவன் திருப்பணி செய்தல் ஐயர்மாரின் குருமாரின் இல்லங்களும் ஏனைய பிற்காலத்தில் தோன்றிய ஸ்ரீ பத்திரகாளியம்மன் கோயில் உட்பட கோயில்களுக்கு செல்லும் வழிகளும் சற்றுப்பிரகாரமும் அமைந்துள்ளன.

இந்த ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சுவாமியின் முன்னைநாதன் அம்மனின் பெயர் வடிவாம்பிகை முன்னேஸ்வரம் ஆலயத்திலுள்ள தூபி தூண்களெல்லாம் தென் இந்தியாவில் உள்ள கோயில்களில் உள்ளவைகளை ஒத்திருக்கின்றன. கோயில் தோற்றத்தின்படி அது மிக மிக தொன்மையானது. இலங்கையின் சக்தி பீடங்களில் ஒன்றாகவும் விளங்குவது அன்னை வடிவாம்பிகாவின் பெருமைகளும் அருட் சக்தியும் அளவிடற்கரியன எல்லை கடந்தன சிவபெருமான் வீற்றிருக்கும் ஒவ்வொரு தலமும் ஒவ்வாரு வகையில் சிறப்புப் பெற்று விளங்கும். அறுபத்து மூன்று நாயன்மார்களின் வெண்கலச் சிலைகள் சிறப்பான சிற்ப நுணுக்கங்களுடன் செய்யப்பட்டு தொன்மைக் காலம் முதல் ஒன்று சேர காட்சியளிப்பது இந்த திருத்தலத்திற்கே உரிய சிறப்பாகும். விஜய மன்னன் வருகைக்கு முன்பே சிவ பக்தனாகிய இராவணனாலும் இராம பிரானாலும் பிந்தய காலத்தின் மன்னர்களாலும் பூஜிக்கப்பட்ட திருத்தலம் முனீஸ்வரம் ஆகம். முன்னேஸ்வரம் பதியில் ஸ்ரீ வடிவாம்பிகை சமேத ஸ்ரீ முன்னைநாத பெருமானின் திருவருளும் பெரும் பேறும் பெற்ற சான்றோர்கள் பலர் வடிவாம்பிகா தேவிக்கும் முன்னைநாதருக்கும் பல பாமாலைகளைச் சூட்டி மன்னா அவை சார் வடிவில்



வெளியிடப்பட்டுள்ளன.

547 ஆண்டுகளுக்கு முன் கோட்டையை ராசதானியாக கொண்ட 9வது ஸ்ரீ பராக்கிரம பாகு மன்னர் இந்த ஆலயத்திற்கு சில கிராமங்களை மானியமாக வழங்கினார் . ஆலயத்தில் காணப்பட்ட ஒரு கல்வெட்டிலிருந்து தெரிய வந்துள்ளது. சோழ மகாராஜா மன நீதி கண்ட சோழனின் வழிவந்த பரராம தேவ மகாராஜாவின் மகனான குளக் கோட்டு மகாராஜா அதற்கு நெடுங்காலத்திற்கு முன்பு இலங்கைக்குதமது பரிவாரங்களுடன் விஜயம் மேற் கொண்டு திருக் கோணேஸ்வரம் திருப்பணிகளை நிறைவேற்றிய பின் முனீஸ்வரம் திருப்பணிகளை நடத்தி வித்தாமிர்தம் சிவதீர்த்தம் கூபம் குளம் முதலானவற்றில் படித்துறைகள் முதலானவற்றின் பணிகளையும் செய்து சுப முகூர்த்தத்தில் கும்பாபிஷேகமும் செய்த வைத்தார். என வரலாற்றுக் குறிப்புகளிலிருந்து தெரிய வருகிறது. பின்னர் சோழ நாட்டிலிருந்து சைவர் செட்டி வேளாளர் உட்பட பல்வேறு தொழில் சார் நூற்றுக்கணக்கான குடும்பங்களை அழைத்து வந்து கோயில் திருப்பணிகள் தடையின்றி நடைபெற கோயிலை அண்மித்த பிரதேசங்களில் குடியமர்த்தி கிராமங்களையும் வழங்கினார் என்றும் அந்த வரலாற்றுக் குறிப்பில் காணப்படுகிறது.

இராமபிரான் இராவணனை சங்காரம் செய்த பின் அவரை பிரம்மகத்தி தோக்ஷம் பிடித்தது அவர் பாரத நாட்டுக்குத் திரும்பும் போது இந்த இடத்தைக் கடக்கும் போது அவரைப் பிடித்திருந்த பிரம்மகத்தி தோஷம் அகன்று விட்டது. உடனே இராமர் இந்த புண்ணிய தலத்தின் பெருமையை வியந்து இங்கு ஒரு சிவலிங்கத்தை பிரதிஸ்டை செய்தார் . என புராணங்கள் கூறுகின்றன இதிலிருந்து இந்த புண்ணிய தலத்தின்மகிமையைத் தெரிந்து கொள்ளலாம். இந்த தலம் மற்றத் தலங்களைப் போல் பாடல் பெற்ற தலமாக இல்லாவிட்டாலும் சரித்திரப் புகழ் பெற்ற தலமாக விளங்ககிறது. பாவம் செய்தவர்கள் காசிக்கு சென்று தமது பாவங்களை நிவர்த்திப்பார்களாம் முன்னொரு காலத்தில் வியாசமுனிவர் காசி திருத்தலத்தில் எனைய முனிவர்கள் சிவன் விஸ்ணு பற்றிய சர்ச்சையின் போது விஸ்ணுவே பரத்வமுள்ளவர் வலது கையை உயர்த்தி கூறிய போது பின் தெய்வ சாபத்தால் கையை தாழ்த்திக் கொள்ள இயலாது சிவனின் ஆணையின் படி அன்னை வடிவாம்பா சமேத முன்னை நாதப் பெருமான் சந்நிதியில் பூஜைகள் செய்து பூஜித்ததன் பின் கரம் பழையபடியாகின சமயம் சார்ந்த வரலாற்றுக் குறிப்புகள் தெளிவு படுத்துகின்றன .

முன்னேஸ்வர மான்மியம் எனும் நூல் கூறும் மரபினபடி நோக்குகையில் குளக் கோட்ட மன்னனின் திருப்பணி கி.பி 1410-1462ஆண்டுகளிலும் ஒன்பதாவது பராக்கிரமபாகு மன்னனின் திருப்பணி கி.பி 1509-1528 ஆண்டுகளிலும் நடைபெற்றுள்ளத. போர்த்துகேயரின் படையெடுப்பினால் 1578ல் தரைமட்டமாக்கப்பட்ட இத்திருத்தலம் சுமார் 175 ஆண்டுகள் பொலிவிழந்து காணப்பட்டது இவ்வாலய மகிமையை அறிந்த கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்க மன்னன் இவ்வாலய திருப்பணிகளை நிறைவேற்றியதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன இவ்வாலயத்தில் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் சிலாசனம் கற்பக் கிரகத்தின் ஈசானத்திலிருந்த மேற்கு பகுதி வரை அதிஸ்டானத்தில் காணப்படுகிறது. இவற்றுடன் 9ம் பராக்கிரமபாகு மன்னனின் தாமிர சாசனமும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனின் செப்புப்பட்டயமும் வரலாற்றாதாரமாக விளங்குகின்றன. தினமும் உஷா கால பூஜை காலசந்தி பூஜை உச்சிக்கால பூஜை சாயட்சைபபூஜை சந்தியாகால பூஜை அர்த்தஜாமபூஜை என ஆறுகால பூஜைகள் நடைபெற்று வருகின்றன

ஆவணி மாதத்து பௌர்ணமியை இறுதி நாளாகக் கொண்டு 28 நாட்கள் மகோற்சவமும் நடைபெற்று வருகின்றன. இவ் விழாவின் போது இவ்வூர் அலங்காரங்களாலும் சோடனைகளாலும் விழாக்காலத்தில் தோன்றும் வியாபார நிலையங்களாலும் மின் அலங்காரங்களாலும் அலை மோதும் ஆயிரக்கணக்கான பக்தர் கூட்டங்களினாலும் பொலிவும் பக்திப் பரவசமம் நிறைந்த விளங்கும் சிவனடியார் திருவிழா பிச்சாடனா திருவிழா நடேசர் திருவிழா வேட்டைத்திருவிழா தேர்த்திருவிழா தீர்த்தத் திருவிழா என்பன 28 நாள் திருவிழாவில் முக்கியமானவை 64 நாயன்மார்களின் விக்கிரகங்கள் ஒரே ரதத்தில் வலம் வருவது அடியார்கள் பக்தி பரவசத்துடன் பார்த்து மகிழ வேண்டிய ஒரு காட்சி தைமாதத்து பௌர்ணமியை இறுதி நாளாக கொண்டு 15 நாட்கள் லட்சார்ச்சனையும் பங்குனி மாதத்தில் வசந்த நவராத்திரி காலங்களில் சண்டீ ஹோமமும் புரட்டாதி மாதத்தில் சாரதாநவராத்திரியும் தனித்துவமான விசேஷடங்களாகும். இதைத் தவிர மாசிமாதத்து மஹாசிவராத்திரியும் கிரமம் தவறாத நடராஜரின் ஆறு அபிஷேகங்களும் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றது. சுராசரியாக 5000 யாத்திரிகர்கள் கோவில் வழிபாட்டிற்கு பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருவதாக அவர்களில் சுமார் 20 சதவிதத்தினர் இந்துக்கள் என்றும் 75 வீதத்தினர் பௌத்தர்கள் என்றும் ஆலய நிர்வாகிகள் கூறுகின்றனர். எனையவர்கள் கத்தோலிக்கர் என்றும் இஸ்லாமியர் என்றும் அவர் கூறுகின்றார். மத வேறு பாடுகள் இன்றி அனைவருமே இறைவன் சந்நிதியில் சமர்ப்பிப்பதற்காக பழங்களும் மலர்களும் மலர் மாலைகளும் ஊதுபத்திகளும் சூடமும் அடங்கிய தட்டுக்களைக் கொண்டு வருகிறார்கள் ராமபெருமானுக்கு இத் தலத்துடன் உள்ள தொடர்பை அறிந்துள்ள இந்திய யாத்திரிகர்களும் பெரும் எண்ணிக்கையில் இத் தலத்திற்கு வருகின்றனர்.

## போட்டிச் சிறுகதை 5



பெயர்: அகலியா சற்குணம்
முகவரி: ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.
சிறுகதை :திருப்பம்




நந்தவனம் எனும் ஓர் அழகிய கிராமம் இங்கு பச்சைப்பசேல் என சாட்சியளிக்கும் வயல் வெளிகள் பக்தி தரும் ஆலயங்கள், பெரியசந்தை, வைத்தியசாலை, பாடசாலை என்பனவும் அவ்வூரிலே அமைந்துள்ளன. நேரில் பார்த்தவர்களைக் கேட்டால் சொல்லு வார்கள் அந்த ஊரின் புகழை. கிராமத்தின் முன்புறத்திலே பெரிய வீடு ஒன்று. அது தான் வைரமுத்துவின் வீடு. இவர் அனை வருக்கும் உதவிகளைச் செய்யும் மனப் பான்மை உடையவர். நெல் ஏற்றுமதி செய்யும் தொழில் செய்கிறார். ஓரளவு நல்ல வருமானம் கிடைக்கின்றது. இவரது மனைவி சரஸ்வதி மிகவும் இறைபக்தி உடையவள். இவர்களுக்கு ஆஸ்திக்கொரு மகன் ரமேஸ், ஆசைக்கொரு மகள் பாரதி பாரதி மிகவும் அழகு நிறைந்தவள் அழகை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் அகராதியிலே இல்லை எனலாம். கயல் போன்ற இரு விழிகள். ரோஜா இதழ் நிறம். நீண்ட கரு மையான கூந்தல். உதட்டின் கீழ் மச்சம். வளைந்த புருவம். மொத்தத்தில் இவள் ஒரு அழகு தேவதை தான். அப்பாவின் செல்லப்பிள்ளை. ஊரிலுள்ள சிறுவர்களுக்கு எல்லாம் பாரதி அக்கா என்றால் மிகவும் பிடிக்கும்.

பாரதி க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தி பெற்று உயர்தரம் கற்பதற்காக புதிய பாடசாலையில் சேர்ந்தாள். அங்கு தான் சுரேஸ் படிக்கின்றான். சுரேஸ் பாரதி சின்ன வயது தொடக்கம் இன்று வரை நல்ல நண்பர்கள். சந்தோசம் துக்கம் எது வானாலும் எல்லா விடயங்களையும் பகிர் ந்து கொள்வாள் பாரதி. ஆனால் சுரேஸ் எதையும் மனம் திறந்து சொல்வதில்லை. இதை நினைத்து பாரதி கவலைப்படுவதும் உண்டு. பாடசாலையில் நன்றாக படித்து வந்தாள் பாரதி. எல்லா பரீட்சைகளிலும் முதலிடம் பாரதிக்குத்தான் கிடைக்கும். இவள் படிப்பைப் போல் விளையாட்டிலும் மிகுந்த ஆர்வம் உடையவள். நிறைய சான்றிதழ்களும் பரிசுகள், வெற்றிக் கேட யங் களை விளையாட்டிலும் படிப்பிலும் பெற்றுள்ளாள். இவளின் ஒரே இலட்சி யக் கனவு தான் ஒரு வைத்தியராக வர வேண்டும் என்பது தான் என்று பாரதி அடிக்கடி கூறுவாள். இப்படியே பாட சாலை நாட்கள் உயர்தர பரீட் சையை நோக்கி நகர்ந்து சென்றன. அன்று பாரதியின் பிறந்த நாள். பட்டுப் பாவாடை தாவணியுடன் வரும் அழகைப் பார்த்த சுரேஸ் ஒரு கணம் தன்னையே மறந்தான். எனினும் தங்களின் நட்பினை எண்ணிய சுரேஸ் தன் மனதை சமாதானப் படுத்திக் கொண்டான். சில நாட்களின் பின் தந்தைக்கு வெளி யூரில் வேலை கிடைத்து வெளியூர் சென்ற சுரேஸ் பாரதியிடம் சொல்லாமலே சென்றுவிட்டான். அங்கே தன் படிப் பைத் தொடர்ந் தான்.

யோசித்தபடியே பாரதி நண்பி ஒருத்தி இருப்பதையே மறந்திட்டான் போல சொல் லாமல் போயிற்றானே. சரி அவனுக்கு சரி அவனுக்கு நேரம் இருக்கேலைப்போல என்று முணுமுணுத்தபடி பாடசாலைக்கு சென்றாள்.

அன்று பாரதியின் வகுப்பிற்கு புதிதாய் சேர்ந்தவன் தான் சுதன். இவனைப் பற்றி சொன்னால் ஆண்களிலே தான் மட்டும் தான் அழகு என்ற நினைப்பு. பணம் தான் வாழ்க்கை. தன்னை விட யாருமில்லை என்ற பெரிய எண்ணம். இவன் சிரிப்பின் பார்வை அந்த பாம்பினை விட கொடிய விஷமுடையது. மற்றவர்களை மதிப்பது இல்லை. மரியாதை என்றால் அவ னுக்கு பிடிக்காது. மொத்தத்தில் தான் ஒரு நல்லவன் போல சிவாஜியை மிஞ்சும் அளவிற்கு நடிப்புத்திறன் கொண்டவன் தான் சுதன். இவனுக்கு படிப்பினை விட காதல் முக்கியம். அதிலும் ஐஸ்கிறீம் போலவே காதல் ஒன்று முடிய இன் னொன்று. பெண் களை காதலிக்கும் அளவிற்கு ஏமாற்று வதிலும் "தனி ஒரு வன்" எனலாம்.

பாடசாலையில் சுதன் கண்ணில் பட்டவள் தான் பாரதி அவளின் அழகு அவனை மெய் சிலிர்க்க வைத்தது. வழக் கம் போல தன் வேலையை ஆரம்பித்தான். சுதன் பல ஆசை வார்த்தைகளை பேசி அவளை காதலிக்க வைக்க முயற்சித்தான். பாசமான தன் குடும்பம் தான் வாழ்க்கை என்று கூறினாள் பாரதி. இதைக்கேட்ட சுதன் பாசத்தைக் காட்டுவது போல நடித்தான். அன்புக்கு அடிமையான பாரதி சுதனின் அன்பு வார்த்தைகளை நம்பிவிட்டாள். அவனின் காதலை ஏற்றுக்கொண்டாள். ஒரு நாள் சுதனின் கைகளை பற்றிய வண்ணம் கேட்டாள் "சுதன் நீங்க என்னை கண்டிப்பா கல்யாணம் செய்வீங்கதானே. உங்கமேல நான் நிறைய நம்பிக்கை வச்சிட்டேன். இனி நீங்கதான் எனக்கு எல் லாமே. என் ஒரே கனவை நிறைவேற்ற உதவி செய்வீங்கதானே" என மனதில் பட்டதை கேட்டு முடித்தாள்.

பாரதி! நீ ஒன்றும் யோசிக்காதே எல் லாம் நான் பாத்துக்கொள்வேன் என அன் பாக பேசினான் சுதன்.

இவர்களின் காதல் விடயம் எப்படியோ பாரதி வீட்டுக்கு தெரிந்துவிட்டது. அன்று மாலை ரியூசன் முடிந்து வீட்டுக்கு வந்ததும் பாரதியிடம் இவ்விடயம் பற்றிகேட்டு விசா ரித்தாள் பாரதியின் அம்மா. அவளும் எல்லா உண்மைகளையும் கூறிவிட்டாள். ஆத்திரப்பட்ட ரமேசை தடுத்தார் வைர முத்து.

"இப்போ உன்னுடைய வாழ்க்கையை எங்களால் வாங்கித்தர முடியாது. உனக்கு வேற பையனா பாத்து கல்யாணம் செய்து தாறம். அந்த குடும்பம் சரியில்லை. மகள் அந்த கேவலமான குடும்பத்தில் சம்பந் தம் செய்யேலாது. அவர்கள் பரம் பரை முரண்பாடு காரணமாக நம்ம குடும் பத்தின் உறவே வேண்டாம் என விலகி யிருக்கிறார்கள் அவர்களை நம்பி எப்படி உன்னை கட்டிக்கொடுக்கிறது" என புத்திமதி கூறினார் வைரமுத்து.

பாரதி சுதனை சந்தித்து எங்கள் வீட்டில் சம்மதம் இல்லை என்ன செய்வது. (சுதன் மனதுக்குள் ஆனந்தப்பட்டான்) தயங்கிய பாரதி மறுகணம் உங்களுடன் வந்திடுறன் என சொன்னாள். சுதனும் சம்மதம் தெரிவித்தான் மறு நாள் காலை பாரதி வீட்டை விட்டு வந்தாள் சுதன் தன் வீட்டிற்கு கூட்டிச்சென்றான். மாமியார் வீடு கணவன் என சந்தோஷத்துடன் வந்த பாரதிக்கு அங்கு தான் காத்திருந்தது நிறைய மாற்றங்களும் குழப்பங்களும். கொஞ்ச நாட்கள் சந்தோசமாகத்தான் கழிந்தது. யார் கண் பட்டதோ தெரியவில்லை பாரதியின் வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் அவள் சந்தோசத்தினை மறுபக்கம் திருப்பிப் போட்டது. பாரதியை உயர்தர பரீட்சை எழுத விடவில்லை. சுதன் தெரியும் தானே பரீட்சை தான் இலட்சியத்தின் முதல்படி என்ற பாரதியை அடித்துவிட்டான். ஏக்கத்தில் மயங்கி விழுந்தாள் பாரதி. அப்போது அவள் வயிற்றில் ஒரு உயிர் இருப்பது தெரிந்தது. அதன் பின்னர் சுதன் வீட்டார் பாரதியை இன்னும் கஸ்ரப்படுத்தினார்கள். எல்லா வேலைகளையும் அவளைக் கொண்டு தான் செய்வார்கள். சுதன் குடித்துவிட்டு வந்து அடிப்பது வழக்கமாயிற்று. சாப்பாடு கூட கொடுக்காமல் பட்டினி போடுவார்கள். இதனால் அவள் வயிற்றில் இருந்த குழந்தை இறந்து போனது. இவ்வாறு பல கொடுமைகளை செய்தார்கள். புகுந்த வீடு என்ற மதிப்பும் மரியாதையும் வைத்த பாரதி மேலும் பொறுமையாக இருந்தாள். பாரதியின் நிலைமை அறிந்து பார்க்க வந்த பாரதியின் தாயையும் விரட்டினார்கள். பொறுமை தாங்காது எதற்காக என்னை கொடுமைப்படுத்துறீங்க எல்லாரும். நான் என்ன தப்பு செய்தேன். சுதன் எந்தளவு உண்மையான அன்பை உங்கள் மீது வைத்து காதலித்தேன் கொஞ்சமாவது என் மேல் இரக்கம் இல்லையா என அழுதபடியே என்ன காரணம் கேட்டாள்.

(தொடர்ச்சி 15 இல்)


இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும் பினால், இப்பத்திரிகையில் பிர சுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக் கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 5

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ........................................
........................................
சிறுகதையின் இலக்கம் : ........................................
எழுதியவர் பெயர் : ........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தொலைபேசி இலக்கம் : ........................................
........................................ ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

........................................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# சமூக நல்வழி மன்றத்தின் ஸ்தாபகர் கலியபெருமாள்

2004ம் ஆண்டு முதல் மனித உரிமைக்கான பனிகளை தனது நிறுவனத்தின் ஊடாக முன்னெடுத்தார். இதில் குறிப்பாக பெண்கள்,சிறுவர்கள்,தொழிலாளர் சட்டம் சமூகத்திற்கான உரிமைகள் தொடர்பாக பல்வேறுபட்டவர்களுடன் இணைந்து மக்கள் மன்றங்களை ஊக்குவித்தார். இதில் குறிப்பாக பெண்கள் தலைவிகள் உருவாக்கப் பட்டனர். எபோட்ஸ்லி கிலேஸ் மேரி, சின்னப்பிள்ளை ,தனபாக்கியம்,சிவபாக்கியம்,சுலோட்ஜனா.கோவிந்தம்பாள்,இன்னும் சிலர் சிறந்த தலைவிகளாக செயல்படுகின்றனர். மாகாண சபைகள் பிரதேச சபைகள் தொடர்பாகவும்.மற்றும் எமது மக்களின் சுய நிர்ணய உரிமைகள் தொடர்பாகவும். தோழர்.ஓ.எ.இராமையா.கலாநிதி சந்தரபோஸ்,மற்றும் மு.சிவிலிங்கம் போன்றோர்கள் கருத்துறைகளை வழங்கினர். அதில் முழுமையாக பயிற்சியினை பெற்ற தோட்ட மக்கள் மன்ற தலைவர்களான கலையரசன் விஜேந்திரன் எபோடஸ்சிலி. சந்தனம்.ஜெபஸ்டியன். நியூவெளி. சிதம்பரம் நியூட்டன் பாலச்சந்திரன் கோவிந்தம்பாள்.பன்மூர் சிவபாக்கியம்.யோகப்பன் புரன்லோ இன்னும் சிலர் நன்றாக பயிற்சி பெற்று உருவாக்கப்பட்டவர்கள் தெளிவுடன் இன்றும் இயங்குகின்றார்கள். அவர்களின் தலைமையிலான மக்கள் ஒன்றியங்களும் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றன.

புலிட் நிறுவனத்தில் நிதியினை பெற்று சிறுவர் உரிமைகளுக்காக பனியாற்றியதோடு. அந்த சிறுவர்கள் மூலமாக சாதாரன தர பாடசாலையினை உயர்தர பாடசாலையாக மாற்றுவதற்கு வழிவகுத்தார். எபோட்ஸ்லி பாடசாலையில் கல்வி கற்ற மானவர்களே 2004ம் ஆன்டிற்கும் 2008ம் ஆன்டிற்கும் இடையில் இதனை செய்தனர்.

பெண்களுக்கான வன்முறைகனை இல்லாதொழிக்கும் தெற்காசிய பிரச்சார திட்டத்திற்கு சமூக நல்வழி மன்றத்தின் ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கினர் குறிப்பாக அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து 2004ம் ஆண்டு முதல். 2011ம் வரை பெண்களுக்கான வன்முறை நடக்க கூடாது என்பதில் முன்னின்று செயல்பட்டதோடு.பிரச்சாரத்திற்கான பல்வேறு பாடல்களையும் இயற்றியுள்ளார்.இந்த பிரச்சாரமானது அரச அரசசாரா நிறுவனங்களில் அரசாங்க திணைக்களம் போன்வற்றின் ஊடாக முன்முறமாக எடுத்து செல்லப்பட்டது. குறிப்பாக பிரச்சாரத்திற்கான பாடல்களையும்.மற்றும் நாடகங்களையும் தொடர்ந்து



**செ.தி.பெருமாள்**

இயற்றி வந்துள்ளார். தெற்காசிய பிரச்சாரத்தின் தெற்காசிய ஒன்று கூடல் நுவரெலிய மவட்டத்தில் நடைபெற்றபோது. அதற்கான முழு ஏற்பாடுகளையும் தனது மனைவி சந்திரமதி களியபெருமாளுடன் இணைந்து முன்னின்று செயல்பட்டனர். இதற்கான முழு ஆதரவையும் நுவரெலிய மாவட்ட உயர் பொலிஸ் அதிகாரிகள்,அரசாங்க நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் இன்னும் ஏனைய பொது அமைப்புகளின் உதவிகளை பெற்று 500க்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு பங்காளர்களை வழி நடத்தினார்.

கடந்த 10 வருடகாலத்திற்கு மேலாக தேர்தல் காலங்களில் பெப்ரல் தேர்தல் கன்காணிப்பு அமைப்புடனும். உள்நாட்டு வெளிநாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளுடன் இணைந்து. தனது குழுக்களுடன் தேர்தல் கன்காணிப்பில் ஈடுபட்டார்.கலியபெருமாள் பல்வேறு நாடுகளுக்கு சர்வதேச நாடு களுக்கு சென்று மலையக மக்களின் பிரச்சனைகளை சர்வதேச அரங்குகளிலும் முன்வைத்துதார்.

தொடர்ந்து மலையகத்தில் கொழுந்து பறிக்கும் பெண்களையும் மறக் காமல் சர்வதேச ஒன்று கூடல்களில் கலந்துகொள்ள ஏற்பாடுகளை மேற்கொண்டார். தோட்டங்களில் பெண்கள் மேற்பார்வையாளாகளாக பணியாற்றவேண்டும் என்ற கோரிக்கையினை தொடர்ந்து முன் வைத்து வந்ததோடு. தற்போது அதே பெண்கள் மேற்பார்வையாளர்களாக கடமையாற்றுவதயும் பாராட்ட தவற வில்லை.

இறுதியாக 2011ம் ஆண்டு வுஸ்க் நிதி நிறுவனத்தின் அனுசரனைடன். வேலைத்தள பாதுகாப்பும் சுகாதாரமும் என்ற திட்டத்தினை வட்டவளை ,பொகவந்தலாவ,கனனிவெளி போன்ற கம்பனி தோட்ட மக்களுக்காக செய்தார்.

வீரகேசரி வாராந்த வெளியீடுகளில் நிறைய கட்டுரைகளை ஏழுதியுள்ளார். இதில் மலையக மக்ளின் பிரச்சனைகள் அரசியல் வாழ்க்கை மனித உரிமைகள் சிறுவர் உரிமைகள் பெண்கள் உரிமைகள் சிறுவர் உரிமை தொடர்பாகவும். பிரசுரங்களை வெளியிட்டுள்ளார்.

கலியபெருமாள் தனது குடும்பத்திற்காக எதனையும் சேர்த்து வைக்கவில்லை இறக்கும்போதும் தனது பெயரால் மக்களுக்கு தொடர்ந்து சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தினை கொண்டிருந்தார். இறுதி நாள்வரையிலும் மலையக மக்களுக்கான பனியினை தொடர்ந்திருந்தார் என்பதுதான் உண்மை. அவரது துணைவி.திருமதி சந்திரமதி கலியபெருமாள் ஊடாக ஸ்தாபன அனைத்து பணிகளையும் தொடர்ந்து முன்னெடுத்து வந்தார்.

அவர் இறக்கும் நாள்கூட தனது நிறுவனத்தின் ஊடான சில பனிகளை முன்னெடுத்தார் என்பதுதான் உண்மை. சற்று சுகமில்லாத நிலையில் வீட்டில் இருந்தாலும்கூட தனது மனைவியின் உதவியுடன் இறுதி நாள்வரை நிறுன பனிகளை முன்னெடுத்த அவரின் பனிகள் தொடர்ந்து முன்னெடுத்து செல்லப்படும். அவர் நாமம் என்றும் மக்கள் மத்தியில் வாழும் என்பதுதான் உறுதி.தனது கனவனின் பனிகனை அவர் தன்னுடன் இருக்கும்போதே முழுமையாக முன்னெடுத்து சென்ற அவரது மனைவி சந்திரமதி கலியபெருமாள் தொடர்ந்து முன்னெடுத்து செல்வார். அதற்காக அவருடன் இணைந்து இறுதிவரை பனியாற்றிய மறக்க முடியாத ஒரு சிலரும் அவரது பிள்ளைகளும் உறுதுணை புரிவார்கள்.

அமரர் கலியபெருமாளின் சேவை என்றும் நிலைத்திருக்கும்.நிலைகொண்டிருக்கும் என்பது உறுதி யானது.அவரின் சேவையினை பெற்றுக் கொண்ட மக்கள் மனதில் என்றும் வாழ்வார்.

# திருப்பம்.......

(14பக்கத் தொடர்ச்சி)

சுதன் கோபத்துடன் "இல்லடி! எனக்கு உன்மேல் பாசம் காதல் எதுவுமே இல்லை . உங்கட குடும்பத்தை பழிவாங்கணும் அதாண்டி எங்க விருப்பம். உன் படிப்பை தடுத்து உன்னை உன் குடும்பத்திலிருந்து பிரிக்கணும். அப்பதானே உன் குடும்பத்தை அழ வைக்கவும் அவமானப்படுத்தவும் முடியும். அதற்காகத்தான் இந்த காதல் நாடகம். பரம்பரை பகை என்றும் தீராது என வில்லன் போல கூறினான் சுதன். இன்னும் சில தினங்களில் நாங்கள் எல்லோரும் வெளிநாடு போகப்போறம். நீ எங்கயாவது போயிடு. இல்லை செத்துப்போயிடு! என சுதன் கோபத்துடன் கூறினான். சுதனின் வார்த்தைகள் அத்தனையும் கேட்ட பாரதி சுதனின் துரோகத்தை நினைத்து அவளால் அழுகையை நிறுத்தமுடியவில்லை.

"ஏன் உண்மையான அன்பில் கூட உங்க மனம் மாறவில்லையா? தாத்தா பாட்டி காலத்தில் ஏற்பட்ட பகைக்கு இப்ப பழிவாங்க நினைப்பது ஞாயமா? அப்படியென்றால் நேருக்கு நேர் எதிர்க்கணும். அது தான் உண்மையான ஆண்மை. வீரம். நீங்க எல்லாம் சீ... சீ... சொன்னால் வெட்கம்" என தன் பொறுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தாள்.

அப்போது தான் அவளுக்கு புரிந்தது. தனது அப்பா சொன்னதெல்லாம் ஐயோ! நான் தான் தப்பப் பண்ணிட்டன். எவ்வளவு புத்தி சொன்னார் அப்பா.

அவர் பேச்சை மறுத்திட்டேன். அப்பா என்னை மன்னிச்சிடுங்க. இந்த பாவிளை நம்பினேனே என்று உண்மையான காதலுக்கு வந்த சோதனையை நினைத்து நினைத்து கதறிக் கதறி அழுதாள் பாரதி. தனிமையில் தவித்த மனம் உருகத் தொடங்கியது. ஏமாற்றங்களை தாங்க முடியாத பாரதிக்கு சுதன் சொன்ன "செத்திடு" என்ற வார்த்தை தான் மனதில் பதிந்தது. வேதனையில் மரணத்தின் விழிம்பை எட்டிய பாரதிக்கு அசரீதி குரல் ஒன்று கேட்டது. "எழுந்திடு பாரதி! உன் உயிர் எனக்கு சொந்தமானது அதை மறைக்கும் சக்தி உனக்கில்லை. கஷ்டங்கள் எல்லாம் நிரந்தரமில்லை. உன்இலட்சியத்தை வெல்ல முயன்றிடு பாரதி. உனக்காக சந்தோஷம் காத்திருக்கிறது." உடனே திடுக்கிட்டு விழித்த பாரதிக்கு அந்த அம்மனே நேரில் வந்து சொன்னது போல உணர்ந்தாள். பாரதி மனதில் அந்த நிமிடமே தைரியமும் தன்னம்பிக்கையும் வேரூன்றிவிட்டது. இதுவே பாரதியின் வாழ்க்கையில் பெரும் திருப்பு முனையாக அமைந்தது.

ஆறு வருடங்கள் மெல்லக் கழிந்தன.

புகையிரத நிலையம்...

பாரதியின் அம்மா அப்பா கூடவே சுரேஸ் குடும்பத்தினரும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

புகையிரதம் வருகின்றது.

பாரதி...

இலட்சியக் கனவின் வெற்றியுடன் கழுத்தில் ரெலஸ்கோப் மாட்டி வெள்ளைக் கோட் அணிந்து ஒரு வைத்தியராக.. புதுமைப் பெண்ணாக.. வந்து இறங்கினாள் இவளின் இந்த முன்னேற்றம் அவள் குடும்பத்திற்கு நன்மதிப்பை பெற்று தந்தது. அன்று முதல் ஊர் மக்களுக்கு இலவசமாக வைத்திய சேவை செய்து வந்தாள் பாரதி.

"காதல் என்ற வாழ்க்கையிலும் சுயநலமுடைய ஆண்களினதும் சமுதாயத்தினதும் மத்தியில் ஒவ்வொரு பெண்களின் கஸ்டங்களுக்கும் தீர்வு ஒவ்வொரு பெண்களின் கைகளில் தான் உள்ளது."

# விளையாட்டு

# நல்லிணக்க உதைபந்தாட்டபோட்டி



தினச்செய்தியின் அனுசரணையுடனும் பருத்தித்துறை,வடமராட்சி உதைபந்தாட்ட லீககின் ஒத்துழைப்புடனும் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்திய மாபெரும் நல்லிணக்க



உதைபந்தாட்டபோட்டி கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை வண்ண மயமாக அலங்கரிக்கப்பட்ட மைதானத்தில் பெருமளவுரசிகர்கள் மத்தியில் வெகு விமரிசையாக நடைபெற்றது.யாழ்ப்பாண இராணுவ அணி வீரர்களும் வடமராட்சி தெரிவு அணி வீரர்களும் அதிதிகளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட பின்னர்விருந்தினர்களுடன் வீரர்கள் வைபவ ரீதியாக புகைப்படம் எடுக்கப்பட்டதனை தொடர்ந்துபோட்டி ஆரம்பமானது.

பலம் பொருந்திய இரு அணிகலுக்கும் இடையிலான போட்டியாக அமைந்தமையால்போட்டியின் ஆரம்பம் முதல் வேகம் காணப்பட்டது. இரு அணி வீரர்களும் கோலினை

பெற்றுக்கொள்வதற்காக கடும் முயற்சியினை மேற்கொண்ட போதும் இறுதிதருணங்களில் எதிரணியினரால் கோல் பெறும் வாய்ப்பு தகர்க்கப்பட்டது. முதற்பாதி ஆட்டம் முடிவடைந்தபோது கோல் அடிக்கப்படவில்லை

மிகுந்த எதிர்பார்ப்புடன் ஆரம்பமான இரண்டாவது பாதி ஆட்டத்தில் இராணுவ அணி சிறப்பான கோலை அடித்து ரசிகர்களை ஆரவாரப்படுத்தியது. தொடர்ந்து ஆடிய இராணுவ அணி எதிரணி



கோல் பெறும் வாய்ப்பினை தடுப்பதை நோக்கமாககொண்டு ஆடியபோதும் வடமராட்சி தெரிவு அணியின் அனுபவ வீரரும்



சர்வதேசமைதானங்களில் திறமையினை வெளிப்படுத்திய வீரருமான பிரேம் (பீமா) கோல் காப்பாளருக்குமேலால்

தூக்கிபோட்டு கோலினை அடித்து அதிர்ச்சியளித்தார். நல்லிணக்க உதைபந்தாட்டம் சமநிலையில் நிறைவுபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் தினச்செய்தி பிரதம ஆசிரியர் கே.ரி. ராஜசிங்கம் கருத்துதெரிவிக்கையில்வடமாகாண







உதைபந்தாட்ட வளர்ச்சிக்கு தன்னாலான உதவிகளை வழங்கதான் தயாராக இருப்பதாகவும் தற்போதய இளைஞர்கள் விளையாட்டின் மூலம் வளர்ச்சிகளைபெற தான் விரும்புவதாகவும் தெரிவித்ததுடன் இவ்வாறான போட்டிகள் எதிர்காலத்திலும்கழுகுகள் மைதானத்தில் இடம்பெறும் என உறுதியளித்தார்.






ஜெ. யோகராஜ்


# MS OFFICE இன் பயன்களும் பாவனையும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

ஒரு ஆவணத்தில் வித்தியாசமான வரை படங்களையும்,குறியீடுகளையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி பார்ப்போம்.


ஒரு ஆவணத்தின் தேவைக்கேற்ப வெவ்வேறு வரைபடங்கள் அவசியப்படு கின்றன. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட விட யத்தை விளக்க வேண்டுமாக இருந்தால், அதற்குசில வழிகாட்டல் குறியீடுகள் அவ சியம். இந்தக் குறியீடுகளை கீழே தரப் பட்டுள்ள வழிமுறைகள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

மேல் மூலையில் உள்ள தெரிவுகளில் Insert - Diagram என்ற தெரிவின் மூலம் சில வழிகாட்டல் வரைபடங்களை பெற்றுக் கொள்ளலாம்.





இத்திரையில் சில பயனுள்ள வரை படங்கள் காணப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றை தெரிவுசெய்து எமக்கு தேவையான தகவல்களை இணைத்துக் கொள்ளலாம். உதாரணமாக இந்த வரைபடத்தில் மேல் மூலையிலுள்ள இரண்டாவது தெரிவை மேற்கொண்டால்,


இந்த வரைபடத்தில் பரிணாம வளர்ச்சி, ஒன்றுக்கொன்று தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் அபிவிருத்திசார் தகவல்களை இணைத்துக் கொள்ள முடியும்.




மேலே தரப்பட்டுள்ள சுற்று வட்ட வரை படத்தில் இறப்பர் தயாரிப்புப் பற்றி விளக் கப்படுத்தப்பட்டுள்ளது.




இப்போது நாம் அதே தெரிவுகளில் மற்று மொருகட்டமைப்பை தெரிவுசெய்து அதனூ டாக வீடு கட்டுவதற்கான சில செயல்பாடுகளை விளக்கும் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.



இப்போது நாம் வரைபடத்திற்கு தேவை யான அம்புக்குறிகள் மற்றும் ஏனைய குறி யீடுகள் பற்றி கவனம் செலுத்துவோம். கீழே தரப்பட்டுள்ள சில தெரிவுகளை மேற் கொண்டு நீள்சதுரம், நீள்வட்டம் மற்றும் அம்புக்குறிகளை பயன்படுத்தியுள்ளோம். இவற்றைப் பெற்றுக் கொள்ள முதலில் ஆவ ணத்தின் கீழே உள்ள தெரிவுகளில் சில வற்றை தெரிவுசெய்ய வேண்டும்.



(தொடரும் ...)



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம்-6

வேண்டப்படாதவர்கள் எதிர்பாராமல் வீட்டுக்குள் வந்தால் எப்படி மனம் சலித்துக் கொள்கின்றதோ, அப்படித்தான் தொலைபேசியிலும் நமக்குப் பிடிக்காதார்கள் வந்துவிட்டால் அதே மனச்சலிப்பு நம்மிடம் தொற்றிக்கொண்டு விடுகின்றது. அங்குள்ள வீட்டுத் தொலைபேசிகளுக்கு அழைப்பு வந்தால், அழைப்பவர் பெயர் அல்லது வீட்டு இலக்கம் தெரியும். அதைப் பார்த்துவிட்டு எடுப்பதா இல்லையா என்று ஒரு முடிவுக்கு வந்துவிடலாம்.

அழைப்பவர் யார் என்று அவருக்குத் தெரிந்துவிட்டது. கார்த்திகேயன் ரீசீவரைக் கையிலெடுப்பதா வேண்டாமா என்று ஒரு கணம் நிதானித்தார். மூன்றாம் தடவை தொலைபேசி ரீங்காரிக்க, ஒரு முடிவோடு ரிசீவரைக் கையிலெடுத்து

"ஹலோ..." என்றார்.

"சித்திரா பேசுறன். உங்கிட பெயரில ஒரு கடிதம் வந்திருக்கு. காந்தனிட்ட குடுத்து விட்டிருக்கிறன்"

எதிர்முனையிலிருந்து அழைத்த சித்திரா என்ற பெண் ரத்தினச் சுருக்கமாகப் பேசிவிட்டு ரீசீவரை வைக்கும் சப்தம் காஉத்திகேயன் காதில் வீழ்ந்தது. தொடர்பு துண்டிக்கப்பட்டது தெரிந்தும் கையிலெடுத்த ரிசீவரைக் கீழே வைக்கமால், பேயறைந்தவஉ போல காஉத்திகேயன் அந்த இடத்தில் அசையாமல் நின்றார்.

பின்பு ரிசீவரைப் பட்டென அதனிடத்தில் வைத்துவிட்டு, சோபாவில் தொப்பென உட்கார்ந்தவஉ, பியர் ரின்னை உடைத்து ஒரு மிடறு குடித்தாறு யாரு இந்தச் சித்திரா? அவள் வேறு யாருமில்லை யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைத்து, நாலு பேருக்குச் சொல்லி, மூன்று முடிச்சிட்டு, ஊறரிய உகைரிய மனைவியாக ஏற்றுக் கொண்ட பெண்தான் சற்று முன்பு தொலைபேசியில் சட்டெனப் பேசி, பட்டெனப் போனை வைத்துவிட்ட சித்திரா.

எண்ணிப் பத்துமாதங்களாகவில்லை.

உறவில் விரிசல். இரண்டாவது வருடம் முடிவதற்குள் விவாகம் முறிந்து விட்டது. சித்திரா வயிற்றுள் பூச்சி புழு இல்லாதது வசதியாகப் போய்விட்டது. நீதிமன்றம் வரை போய், இப்பொழுது இருவரும் தனித்தனி வீட்டில் இருக்கின்றார்கள். தான் இருந்த வீட்டை மனைவிக்கு விட்டுவிட்டு கார்த்திகேயன் புது இடம் தேடிப் போய்விட்டார். இருவருக்கும் அரசுதான் வாடகைப் பணத்தை மாதாமாதம் கட்டிக் கொண்டிருக்கின்றது. காத்திகேயனுக்கும் நோய் காரணமாக வேலை இல்லை என்பதால் கணவன்.மனைவி என்று இருவரதும் வாழ்க்கைச் செலவுப் பொறுப்பை தன் தலையில் அரச சுமந்து கொண்டு நிற்கின்றது.இது சுவிஸ் வாழ்க்கையில் சகஜமான ஒன்று.

சென்ற வருடம் வரை வேலை செய்துகொண்டிருந்த காத்திகேயனுக்கு சர்க்கரை வியாதியின் தீவிரம், வேலைக்குப் போகாமல் தடுத்தி நிறுத்தியுள்ளது. அரச உதவிப் பணம் இருவருக்கும் வழங்கப்படுகின்றது.. மருத்துவரும் மருத்துவச் சான்றிதழ் வழங்கியிருப்பதால், இவர் செலவுகளை இவர் பிராந்திய நகரசபை பொறுப்பேற்றுள்ளது. அறை வாடகை, மாதாந்த மருத்துவக் காப்புறுதிக் கட்டணம் போன்றவற்றைச் செலுத்துவதோடு, கைச்செலவிற்கும் ஒரு சிறிய தொகையை மாதாந்தம் கொடுக்கும். வலது குறைந்தவஉ, வேலைக்கு லாய்க்கற்றவர் என்று மருத்துவப் பாசோதனைகள் மூலம் நிரூபிக்கப்பட்டால், சுவிஸ் நாட்டில் இருக்கும் வரை மாதாந்த தொகையொன்று வழங்கப்படும். இந்தச் சலுகையைப் பல நாட்டவர்கள் துஷ்பிரயோகம் செய்த காரணத்தால், இந்த விடயத்தில் பிராந்திய நகரசபை அதிகாரிகள் கடும்போக்கான கொள்கைகளை அனுஷ்டித்து வருகின்றார்கள். மிக அரிதாகவே . இப்படியான விண்ணப்பங்களை அங்கீகரித்து வருகின்றார்கள்.

சித்திரா அரச செலவில் ஜேர்மன் மொழியைப் படித்துக் கொண்டிருக்கிறாள். அந்தந்த நாட்டுமொழியை ஒழுங்காகப் படித்தால் வேலை வாய்ப்புகள் அதிகம். ஆனால் அப்படி ஆவலாக நம்மவர்களில் எத்தனைபேர், பொறுமையாக, ஒழுங்காக மொழியைக் கற்றுவருகின்றார்கள்?

மீண்டும் ஒரு மிடறில் பியர்ரின்னைக் காலி செய்த கார்த்திகேயன், தன் நண்பன் சுந்தரனை ரெலிபோனில் அழைத்தார். சித்திராவின் தொலைபேசி அழைப்பு அவர் மனதில் சற்று வலியை ஏற்படுத்தியிருந்தது. தபாற்கந்தோரில் தன் முகவரியை அவசியம் பதிந்து வைக்கவேண்டும் என்று மனதுள் தீர்மானித்துக் கொண்டார். இனி சித்திராவின் அழைப்புகள் வந்தால் எடுக்கவே கூடாது. அறுந்த உறவு அறுந்ததாகவே இருக்கட்டும்.

கொஞ்சம் ஒவராகக் குடிக்கத் திட்டமிட்டார், காஉத்திகேயன் உடனடியாகத் தொடர்பு கொள்வது சுந்தரன் என்ற சுந்தரலிங்கத்தைத்தான். வயது நாற்பதைத் தாண்டியும் இன்னும் கட்டைப் பிரமச்சாரியாகவே இருப்பவன்தான் சுந்தரம். சுந்தரத்தின் வீடு, கார்த்தியின் வீட்டிலிருந்து அதிக தூரமில்லை.சைக்கிளில் இரண்டு மிதி மிதித்தால் வந்து சேர்ந்துவிடலாம் என்று சுந்தரம் எப்போதும் சொல்வதுண்டு.

" இந்தா வந்திற்றன்.. "

மறுமுனையில் தொடர்பு துண்டிக்கப்பட்டது. ஐந்தாறு பியர் ரின்களை எடுத்துக் கொண்டு , குளிர்சாதனப் பெட்டியை நோக்கி விரைந்தார் கார்த்தி!

யாழ்ப்பாணத்தில் சித்திரை வருடப்பிறப்பு வந்துவிட்டால் ஓஹோவென்று கோவில் திருவிழாக்கள் தொடங்கிவிடும். சித்திரை வருடப் பிறப்பில் தன் தேர்த்திருவிழாவை நடாத்தும் மருதடிப் பிள்ளையார் கோவில் திருவிழா இதற்குள் விஷேஷமானது. 25 நாட்களுக்கு முன்பு கொடியேற்றம். முன்பெல்லாம் 17 நாட்களாக இருந்தது இப்பொழுது 25 நாட்களாக அதிகரித்திருக்கின்றது.

கோடிக்கணக்கான பணத்தைக் கொட்டி, மருதடி பிள்ளையார் கோவில் புதுப்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தத் தடவை திருவிழா பிரம்மாதமாகக் கொண்டாடப்படுகின்றது. நல்லூர் முருகன் கோவில், தெல்லிப்பளை துர்க்கைஅம்மன் கோவில் என்று வரிசையாக நீளும் கோவில் திருவிழாக்கள், வல்லிபுரம் கிருஷ்ணர் கோவில் திருவிழாவில் போய் முடியும். தொடர்ந்து விரதம் பிடிப்பவர்கள் பலர் என்பதால், வீட்டுச் சமையலறையில் அசைவம் தலைகாட்டுவது குறைவாகி விடும்.

சிவனடியானின் சொந்த ஊர் உடுவில். உடுவில் அம்மன் கோவில் திருவிழா ஆரம்பமாகி இருந்தது. அன்று சப்பறத் திருவிழா. கோவிற்பூசை முடிந்து வயற்காட்டு வழியாக வீட்டுக்கு நடந்து வரவேண்டும். ஆனால் இந்த மதிய நேரத்து வெயில் ஆளை எரித்துப் பொசுக்குமாற்போல பயமுறுத்தியது.

ஒரு ஓட்டோவைத் தடுத்து நிறுத்தினார். 150 ரூபா கொடுத்தால் வீட்டு வாசலில் கொண்டுபோய் நிறுத்துவான்.

"தம்பி றொட்டியாலடி" என்று இறங்க வேண்டிய இடத்தைச் சொல்லிவிட்டு, ஓட்டோவில் ஏறி உட்காஉந்தார்.

அவருக்கு ஒரு மகள். அவர் மகள் நிவேதா கனடாவிலதான் இருக்கிறாள். இப்பொழுது கனடாப் பிரஜையாகி விட்டாள். வயது 28 ஆகியும் கல்யாணம் வேண்டாம் என்று பிடிவாதம் பிடித்தபடி நிற்கிறாள். கல்யாணக் கதையைத் தொடக்கினால் என் வேலையுண்டு நான் உண்டு என்று சொல்லிச் சிரித்து மழுப்பி விடுவாள் நிவேதா. தன் மனைவி அம்புஜத்தோடு இரண்டு தடவைகள் சிவனடியான் அங்கு போய் வந்திருக்கின்றாஉ. மாதா மாதம் கனடிய டாலர்கள் அவரைத் தேடிவரும். பென்சன் பணமும் வரும். உடல் ஆரோக்கியமும் பரவாயில்லை. பெண்ணுக்கு ஒரு நல்ல மாப்பிள்ளை அமையாத கவலையைத் தவிர வேறு கவலை அவருக்கில்லை. பணத்தைக் கொடுத்துவிட்டு, ஓட்டோவிலிருந்து இறங்க நினைத்தவஉ, தம்பி சுண்ணாகம் சந்தைக்குப் போவம் என்று சொல்ல, பெருமூச்சு விட்டபடி நின்ற ஓட்டோ, மீண்டும் சீறிக் கொண்டு பாய்ந்தது.


அவர் பணத்தைக் கொடுத்துவிட்டு சந்தையடியில் இறங்கி நடந்தார். சந்தை மரக்கறிகளால் நிறைந்து போய்க்கிடந்தது. என்றுமில்லாதவாறு மரக்கறி வகைகளில் பெரு வீழ்ச்சி. பச்சை மிளகாய் ஒரு கிலோ நூறு ரூபா. பயத்தை கிலோ 40 ரூபா. கத்தரிக்காய் கிலோ 40 ரூபா. இப்படி விலைகளை வரிசையாக அடுக்கிக் கொண்டே போகலாம். சித்திரையில் மலிந்தாலும் வைகாசியில் விலைகள் கூடலாம் என்று பேசிக் கொள்கின்றாஉகள்.கத்தரிக்காய் வியாபாரியை நெருங்கியபோது எதிரே வந்தவர் அவர் கவனத்தை ஈஉத்தார்.

அட நம்ம சித்திரவேல் மாதிரிக் கிடக்கே..முன்னே வந்தவர் இவரை நெருங்க அட சிவனடியானே முகத்தில் புன்முறுவலோடு, தன் நண்பன் சித்திரவேலை நெருங்கிக் கைகளைப் பிடித்துக் கொண்டார் சிவடியனான். பக்கத்தில்தான் இருக்கிறார்கள் என்றாலும் நீண்ட காலம் இருவருமே ஒருவரையொருவர் சந்திக்கவில்லை. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஒரு காலத்தில் ஒன்றாகப் படித்தவர்கள்.

சில சந்திப்புகள் அபூர்வமானவையாக இருந்தாலும், வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்து விடுவதுண்டு. இந்தச் சந்திப்பு அப்படியொன்றாக இருக்கப்போகின்றது என்று இருவருக்குமே அப்பொழுது தெரிந்திருக்கவில்லை.

ஏ.ஜே.ஞானேந்திரன்

## அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள முதல் பெண்மணி ஹிலாரி கிளின்டன்



(வாஷிங்டன்)

அமெரிக்கா வரலாற்றில் முதல் முதலாக ஜனாதிபதி தேர்தலில் பெண் வேட்பாளராக ஹிலாரி கிளின்டன் போட்டியிட உள்ளார். ஐயநாயக் கட்சியை சேர்ந்த ஹிலாரி கிளின்டன் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு அமெரிக்கா ஜனாதிபதி பராக் ஒபாமா சென்ற 9ம் திகதி ஆதரவையும் ஒப்புதலையும் வழங்கியுள்ளார்.

2016ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ஜனநாயகட்சி சார்பில் ஹிலாரிகிளின்டன், வேர்மொன் மாநில செனற்சபை உறுப்பினர் போர்ணி சான்டேஸ் போட்டியிட்டனர்.

மாநிலங்களுக்கு இடையில் நடைபெற்ற உட்கட்சி தேர்தலில் ஹிலாரிகிளின்டன் 2212 பிரதிநிதிகளின் ஆதரவையும், போர்ணி சான்டேர்ஸ் 1827 பிரதிநிதிகளின் ஆதரவையும் பெற்றார். அதை தவிர மொத்தமாகவுள்ள கட்சியின் 715 சுப்படெலிகேட் (கட்சி உத்தியோகத்தவர்கள்) பிரதிநிதிகளில் 521 வாக்கை ஹிலாரி கிளின்டனுக்கும் , 47 பிரதிநிதிகளின் வாக்கை போர்ணி சான்டர்ஸ் பெற்றுள்ளார்கள்.

நவம்பரில் முதல் கிழமை நடைபெறவுள்ள அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலின் முதல் முதலில் போட்டியிடும் முதல் பெண்மணி ஹிலாரி கிளின்டன் ஆவார். இவரை எதிர்த்து குடியரசு கட்சி சார்பில் டொனால்ட்ரம் போட்டி இடுகிறார்.

# இளைய தளபதி விஜய்



முழு பெயர்: ஜோசப் விஜய் சந்திரசேகர்
பிறந்த தேதி: ஜுன் 22, 1974
பெற்றோர்கள்: எஸ்.ஏ.சந்திரசேகரன்
சோபா சந்திரசேகரன்

விஜய் ஆகஸ்ட் 25, 1999 அன்று ,லங்கை தமிழ் வம்சாவளியை சேர்ந்த சங்கீதா சொர்ணலிங்கம் என்ற பெண்ணை திருமணம் செய்தார்.

இரண்டு குழந்தைகள், 2000 ஆம் ஆண்டு மகன் ஜேசன் சஞ்சய் லண்டனில் பிறந்தார்.மகள் 2005 இல் திவ்யா சாஷ ாசென்னையில் பிறந்தார்.

சந்திரசேகர் இயக்கிய படங்களில் சிறுவயது விஜயகாந்தாக விஜய் நடித்திருப்பார்.பின்பு ஒரளவு 15,16 வயதுகளில் ராம்கி நடித்து இவர் தந்தை இயக்கிய இது எங்கள் நீதி என்ற படத்தில். பள்ளியில் படிக்கும் மாணவனாக நடித்து பாதியில் இறந்துவிடும் கதாபாத்திரத்தில் நடித்திருப்பார்.

சென்னை லயோலா கல்லூரியில் பயின்ற விஜய்க்கு படிப்பு ஏறவில்லை இவ்வளவிற்க்கும் தற்போதைய தொலைக்காட்சி அறிவிப்பாளரான ரபிபெர்னார்ட்தான் விஜய்க்கு வகுப்பாசிரியர். கல்லூரிக்கு செல்லாமல் ரஜினிகாந்த் நடித்த அண்ணாமலை படத்தை சென்னை உதயம் தியேட்டரில் பலமுறை பார்த்ததாக சொல்வதுண்டு இவருக்கு படிப்பு சரியாக வரவில்லை என்பதை புரிந்துகொண்ட இவரது தந்தை இவரை சினிமாவில் அறிமுகப்படுத்தினால்தான் சரியாகவரும் என்று இவரை தன் இயக்கத்தில் நாளைய தீர்ப்பு என்றபடத்தில் அறிமுகப்படுத்தினார் படத்தின் ஹீரோயின் ஈஸ்வரிராவ்.

படத்தில் கோர்ட் சீன்களை வைத்து இவரது தந்தை தன் வழக்கத்தை மாற்றாமல் எடுத்திருப்பார்படம் சுமாராகத்தான் போனது.அடுத்ததாக விஜய் தன் தந்தை இயக்கத்தில் செந்தூ ரபாண்டி என்ற படத்தில் நடித்தார் எஸ்.ஏ சந்திரசேகர் மீது உள்ள மரியாதைக்காகவும் விஜய் மீது உள்ள நட்புக்காகவும் விஜயகாந்த் கௌரவவேடத்தில் இப்படத்தில் நடித்தார்.இப்படம் சற்று வெற்றிபெற்றது. அடுத்ததாக தந்தை இயக்கத்தில் ரசிகன் படத்தில் நடித்தார் இப்படம் மாபெரும் வெற்றிபெற்றது.இப்படம் ஓடியதற்க்கு சங்கவியின் திகட்டலான கவர்ச்சியும் ஒரு காரணம்

ரங்கநாதன் இயக்கத்தில் வந்த கோயமுத்தூர் மாப்ளே உட்பட சில படங்களில் சங்கவியின் கவர்ச்சியே பிரதானமாக இருந்து படம் வெற்றிபெற உதவியது.இதற்க்கு மேல் இப்படிப்பட்ட படங்களில் நடித்து கொண்டிருந்தால் நன்றாக இருக்காது என்பதை உணர்ந்த விஜய் ,பிரபல இயக்குனர் விக்ரமன் இயக்கத்தில் நடிக்க ஒப்புக்கொண்டு நடித்த படம்தான் பூவே உனக்காக என்ற படம் 200 நாட்களை கடந்து குடும்பத்தோடு அனைவரும்பார்க்கும் சிறந்தபடமாக இருந்தது.

அடுத்ததாக பாசில் இயக்கத்தில் நடித்த காதலுக்கு மரியாதைஇவருக்கு டேர்னிங் பாய்ண்ட்டாக இருந்தது இந்தப்படம் சிறந்த இசைஞானியின் இசையாலும்பாசிலின் சிறந்த இயக்கத்தாலும் விஜய் ஷாலினியின் சிறப்பான நடிப்பாலும் 300 நாட்களை கடந்து ஓடியது.இதோடு விஜய் மார்க்கெட் சூடுபிடித்து இதுபோன்ற காதல் கதைகளில் நடிக்கஆரம்பித்தார் அதில் துள்ளாதமனமும் துள்ளும் படம் சிறப்பாக ஓடியது படத்தை இயக்கியவர்எழில்.இதற்க்குபிறகு இவரின் படங்கள் சொல்லிகொள்ளும்படியாக இல்லை நடுவில் செல்வபாரதி இயக்கத்தில் நடித்த வசீகரா நல்ல படமாக இருந்தும் என்ன காரணத்தினாலோ படம் சரியாகபோகவில்லை.

இந்த நேரத்தில் இவருக்கு வந்து சேர்ந்த இயக்குனர் ரமணா அவர்கள்.இவரின் இயக்கத்தில் விஜய் நடித்த திருமலை என்ற படம் மசாலா படமாக இருந்தது.இந்த படத்தின் சுமாரான வெற்றிஇவருக்கு கொஞ்சம் தெம்பைகொடுத்தது.அடுத்ததாக தரணி இயக்கத்தில் நடித்த கில்லி படம்மிகப்பெரும் வெற்றிபெற்றது.தொடர்ந்து மதுர,பகவதி,திருப்பாச்சி,சிவகாசி என்று கரம்மசாலாபடங்களாக நடிக்க ஆரம்பித்தார்

பின்னணிப் பாடகராக தேவா படத்தில் பாட ஆரம்பித்த விஜய், 2005-ல் சச்சின் படத்தில் பாடியிருக்கிறார். விஜய்க்குத் திருமணம் ஆனவுடனேயே அவரதுபெர்சனல் காஸ்ட்யூம் டிசைனராக மாறி விட்டார் மனைவி சங்கீதா. இன்றைக்கு வரைக்கும் அவர் தேர்ந்தெடுத்துத் தருகிற டிரெஸ்களைமட்டுமே அணிகிறார் விஜய். ,ந்த காஸ்ட்யூம் டிசைன் சினிமா வரைக்கும் போகிற வாய்ப்பு இருக்கிறது!

ஜுன் 22 பிறந்த நாளன்று எங்கே இருந்தாலும் ஓடிவந்து தாயின் அருகில் இருக்கவே விரும்புவார்.வெளிநாட்டில் இருந்தாலும் அங்கிருந்து கிளம்பிவந்து அன்றுமுழுவதும் அம்மா பக்கமே இருக்கிற அம்மா பிள்ளை விஜய்! எவ்வளவு வேலை, ஸட்டிங் முடிந்து வந்தாலும் ஹோம் தியேட்டரில் ஏதாவது ஒரு ஆங்கிலப் படம் பார்த்துவிட்டுத்தான் தூங்குவார். அதிசயிக்கும்படியான பெருவாரியான சி.டி. கலெக்ஸன் உண்டு அவர் வீட்டில்.நான்-வெஜ் உணவுகளின் மேல் விஜய்க்குப் பிரியம் உண்டு. அதுவும் அம்மா சமைத்த அசைவ உணவுகளுக்கு விஜய்அடிமை!

விஜய்க்கு நகைகளின் மீது அவ்வளவாக ஆசை கிடை யாது. ஆனால்,இப்போது இரண்டு சிறு மோதிரங்களை அணியத்தொடங்கியிருக்கிறார் ஹிந்தியில் அவருக்கு மிகவும் பிடித்த நடிகர் அமிதாப்தான். இன்றைக்கும் அவர் நடித்து வெளியாகிற ஹிந்திப் படங்களுக்கு முதல்நாள் முதல் ஸோ பார்க்க ஆசைப்பட்டுப் போவார்!

நடனத்தில் மிகவும் பெயர் பெற்ற விஜய்க்கு பிடித்த நடனக்காரர்கள் பிரபுதேவா, லாரன்ஸ், மாதுரி தீட்சித்தானாம் நெருக்கமான கல்லூரி நண்பர்களை அழைப்பது மச்சி மற்றவர்களை விஜய் அழைப்பது எண்ணாங்கண்ணா நெருங்கிய நண்பர்கள் குடும்ப த்தோடு வந்தால், அழகிய தோசை வார்த்துக் கொடுப்பது இந்த அழகிய தமிழ் மகன் தான். அவர் தயாரித்துத்தருகிற காபி விசேஷ சுவையாக இருக்குமாம்! எப் போதும் விரும்பிச் சாப்பிடுவது மட்டன் குருமா, தோசை. சோளம் தோசையாக இருந்தால்,ன்னும் பிடித்தமாகச் சாப்பிடுவார்!

அம்மா சோபா சந்திரசேகரை இசை கச்சேரிகளில் பாடஊக்கம் கொடுத்து உற் சாகப்படுத்துவார். அம்மாவின் கச்சேரிகளுக்கு முதல்ஆளாக ஆஜர் ஆவார் எப்போதும் மகன் சஞ்சய்யும், மகள் திவ்யாசாஸாவும் அப்பாவின் நடிப்பில் ஆர்வமாக இருந்தாலும் படிப்பிலும் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்என்பதில் உறுதியாக இருகிறார் விஜய். எவ்வளவோ அழைப்புகள் வந்தும் பிற மொழிப் படங்களில் நடிக்கச் சம்மதிப்பது இல்லை விஜய்.தமிழில் மட்டுமே நடிப்பேன் என்பதில் உறுதியாக நிற்கிறார் விஜய்யோடு அதிக படங்களில் ஜோடியாக நடித்தவர்கள் சிம்ரன், ஜோதிகா த்ரிஸா. நிறைய புதுமுகங்களோடு ஜோடி சேர்ந்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு ஜாலியாக ரிக்கார் டிங்கில் உட்கார ஆசைப்படுவார் விஜய்.

# சரித்திர நாவல் ஆசிரியர் சாண்டில்யன்

சாண்டில்யன் - வரலாற்றுப் புதினங்களை விரும்பிப் படிக்கும் வாசகர்களால் இந்தப் பெயரை மறக்கவே முடியாது. தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறையை அடுத்துள்ள திருஇந்தளூர் அவரது சொந்த ஊர்.

1910ஆம் ஆண்டு நவம்பர் 6ஆம் தேதி, டி.ஆர்.சடகோபன் ஐயங்காருக்கும், பூங்கோதைவல்லி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்.

பிறந்த ஊர் திருக்கோவிலூர். அவரது இயற்பெயர் எஸ்.பாஷ்யம். கல்லூரிப் படிப்பில் "இன்டர்மீடியட்" படித்தார். அப்போதே அவருக்குத் தேசிய இயக்கத்தில் ஈடுபாடு ஏற்பட்டது. காங்கிரஸ் இயக்கத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கிய பிறகு, சென்னை வந்த அவருக்கு, அறிஞர் வெ.சாமிநாத சர்மா, கல்கி போன்றோர் நண்பர்களாயினர். இருவருடனும் பழகியதால் சிறுகதை எழுதும் ஆர்வம் ஏற்பட்டது. அந்நாளில், "திராவிடன்" இதழாசிரியர் தோழர் சுப்பிரமணியம் நண்பரானார்.

அவருடைய "திராவிடன்" இதழில் "சாந்தசீலன்" என்ற சிறுகதையை எழுதினார். அந்தக் கதையைப் படித்த கல்கி, அவர் ஆசிரியராக இருந்த "ஆனந்த விகடனில்" எழுத வற்புறுத்தினார். சாமிநாத சர்மா ஆசிரியராக இருந்த "நவசக்தி"யிலும் சாண்டில்யனின் கட்டுரைகள் வெளிவந்தன. சாண்டில்யன் எழுதிய "பலாத்காரம்" என்ற முதல் நாவலுக்கு அந்நாளைய காங்கிரஸ் தலைவர் தீரர் சத்தியமூர்த்தி சிறப்பாக முன்னுரை எழுதியிருக்கிறார். பிற்காலத்தில், "புரட்சிப்பெண்" என்ற தலைப்பில் அந்த நாவல் வெளிவந்தது.

சாண்டில்யனுக்குத் தன்னம்பிக்கை அதிகம். "ஒரு படத்துக்கு மக்கள் மத்தியில் ஐந்து ஆண்டுகள் மட்டுமே மவுசு இருக்கும். ஆனால், நான் எழுதும் புத்தகங்களுக்கு 500 ஆண்டுகள் மவுசு இருக்கும். அதனால்தான் நான் எழுத்துத் துறையைத் தேர்ந்தெடுத்தேன்" என்று, சாண்டில்யனே ஒருமுறை கூறியிருக்கிறார். சாண்டில்யனின் எழுத்துத் திறமையை அறிந்த சுதேசமித்திரன் ஆசிரியர்

ஸி.ஆர்.சீனிவாசன், அவரை நிருபர் பணியில் அமர்த்தினார். சாண்டில்யன், உயர் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகள் பற்றிய செய்திகளை எழுதும் நிருபராகப் பணியாற்றினார். சாண்டில்யன் நிருபர்களுக்கு வழக்கு மன்றத்திலிருந்த "மரியாதை"யை சுவைபட விவரித்து, "ஆங்கில ஏடுகளின் நிருபர்களுக்கு மட்டும் நீதிமன்றத்தில் வசதியாகவும் மற்ற தமிழ்ப் பத்திரிகை நிருபர்கள் நின்றுகொண்டுதான் எழுதவேண்டிய நிலை" உள்ளதைச் சுட்டிக்காட்டிப் பேசியும், எழுதியும் வந்தார். நீதிமன்ற நடவடிக்கைகளை சுதேசமித்திரனில் வெளிவரச் செய்தார். சுதேசமித்திரன் செய்தி வழக்கறிஞர்களிடையே பரவியது. சாண்டில்யனுக்கு உட்கார நாற்காலி வசதி செய்யப்பட்டது.

நீதிமன்ற வழக்குகளை நல்ல தமிழில் சுதேசமித்திரனில் எழுதியதால், சாண்டில்யன் திறமை எங்கும் பேசப்பட்டது. 1937இல் மகாத்மா காந்தியைச் சந்தித்துப் பேட்டி கண்டு எழுதினார். சாண்டில்யனின் மதிப்புணர்ந்த நிர்வாகம், அவரை உதவி ஆசிரியராகப் பதவி உயர்வு அளித்தது. பின்னர் சில கருத்துவேறுபாடு காரணமாக, மீண்டும் நிருபர் பதவி தரப்பட்டது. இதனால் கோபமடைந்த சாண்டில்யன், அந்தப் பதவியிலிருந்து விலகி "ஹிந்துஸ்தான்" வார இதழில் சேர்ந்தார். சாண்டில்யனுக்கு, சினிமா, நாடகம் பார்ப்பதில் மிகுந்த ஈடுபாடு உண்டு. "ஹிந்துஸ்தானி"ல் பணியாற்றியபோதுதான் திரைப்படத்துறையின் தொடர்பு அவருக்கு ஏற்பட்டது.

திரைப்படக் கலையில் முன்னணியில் நிற்க வேண்டுமென்று இயற்கையாகவே அவரிடம் இருந்த இலட்சியம் அப்போது நிறைவேறியது. சினிமாவைத் தாக்கி எழுதுபவர்களுக்கு அவர், தன் பேனாவின் வலிமையால் பதில் சொல்லியிருக்கிறார். சினிமா பற்றி இராஜாஜி கூறிய கருத்துகளை எதிர்த்து "சினிமா பார்ப்பது கெடுதலா?" என்ற கட்டுரையை 1952இல் எழுதினார். எனக்கு சினிமாவைப் பற்றி ஏதாவது தெரிகிறது என்றால், அதற்குக் காரணமானவர்கள் பி.நாகி ரெட்டி, வி.நாகையா, கே.இராம்நாத் ஆகியோர்தான். "பதினான்கு ஆண்டுகள் சினிமா உலகில் இருந்தேன். அப்போதெல்லாம் கதையை எழுதக் குறைந்தது ஆறுமாதங்களாகும். கதையை எழுதினால் மட்டுமே போதாது. "ஷூட்டிங் ஸ்கிரிப்ட்" தயாரிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

வி.நாகையாவின் "தியாகையா" வெற்றிக்கு சாண்டில்யன் பெரிதும் காரணமானவர். அந்தப் படம் வெளிவந்த பிறகு, புகழின் உச்சியில் இருக்கும்போதே திரைப்படத் துறையிலிருந்து விலகிவிட்டார். இளம் வயதிலிருந்தே அவரின் இலட்சியம் எழுத்தாளராக வேண்டுமென்பது. பிரபலமாக விற்பனையாகும் பத்திரிகைக்கு ஆசிரியராக வேண்டுமென்பது. முதல் எண்ணம் வெற்றிகரமாக நிறைவேறியது. இரண்டாவது எண்ணம் சொந்தமாகப் பத்திரிகை நடத்தி, வெற்றி பெறவில்லை. சில காரணங்களால் மீண்டும் சுதேசமித்திரனில் சேர்ந்தார். "ஞாயிறு மலர்" என்ற சிறப்புப் பகுதியின் பொறுப்பாளரானார்.சுதேசமித்திரன் வாரப் பத்திரிகையிலும் எழுதினார். "அமுதசுரபி"யில் சரித்திர நிகழ்ச்சிகளை நிலைக்களனாகக் கொண்ட சிறுகதைகளை அவ்வப்போது எழுதினார். "சரித்திர நாவல் எழுதும் தாங்கள், வரலாற்றுப் புதினங்கள் எழுதவேண்டும்" என்று "அமுதசுரபி" நிறுவனத்தார் கேட்டுக்கொண்டதால், "ஜீவபூமி" என்ற சரித்திரத் தொடரை எழுதினார். "ஜீவபூமி" தொடர், பின்னர் பிரபல அமெச்சூர் நாடக மன்றத்தாரால் நாடகமாக அரங்கேற்றப்பட்டது. "ஜீவபூமி" தொடருக்குப் பிறகு, "மலைவாசல்" என்ற தொடரை எழுதினார். "மலைவாசல்" புதினத்துக்குக் கிடைத்த வாசகர்களின் வரவேற்பால், பல வரலாற்றுப்புதினங்களை எழுத அவருக்கு உற்சாகம் ஏற்பட்டது.

கன்னிமாடத்தில் தொடங்கி, கடல்புறா (மூன்று பாகங்கள்), யவனராணி முதலிய பிரம்மாண்டமான நாவல்களை எழுதினார். மொத்தம் 50 நூல்களை எழுதியுள்ளார். அவற்றில், 42 சரித்திர நாவல்கள். மற்றவை சமூக நாவல்கள் மற்றும் இலக்கியக் கட்டுரைகள். இவர் எழுதிய மிகப்பெரிய நாவல் "கடல்புறா". மூன்று பாகங்கள் மொத்தம் 2,000 பக்கங்கள். கையெழுத்துப் பிரதிகள் 20,000 பக்கங்களுக்கும் மேல். இந்தியாவிலேயே அதிகம் எழுதி சரித்திரம் படைத்த சாதனையாளர் சாண்டில்யன்தான்.

தினச்செய்தி
என்றும் உங்களுடன்


# நினைவு மண்டபத்தின் வடிவமைப்பு உங்கள் எண்ணங்களை அறிவதற்கு

A 35 பிரதான வீதியில் அமைந்துள்ள முள்ளி வாய்க்காலில் தினச்செய்தி அமைக்கவுள்ள, நாம் இழந்த சொந்தங்களுக்கான நினைவுத் தூபியின் வடிவமைப்பு பற்றி ஓர் முடிவிற்கு வந் துள்ளோம்.

முள்ளிவாய்க்காலை சேர்ந்த திரு.அ.அமிர்த லிங்கம் தினச்செய்திக்கு நன்கொடையாக வழங்கிய 8 பரப்பு நிலத்தில் இந்த நினைவுத் தூபியை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. நினை வுத்தூபி அமைக்கும் வளவுக்குள் முதன் முத லில் அமைக்கப்படுவது 'அகல்விளக்கு மண்டபம்'.

இந்த மண்டபத்தின் உயரம் 18 அடி. அகலம் 9அடி. இந்த மண்டபத்தில் தான் நித்திய விளக்கு எரிய வைக்கப்படும். இந்த நித்திய விளக்கு மின் சாரத்துடன் இணைக்கப்பட்டு புதிய விஞ்ஞான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி எரிவதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது. 24 மணி நேரமும் இந்த அகல் விளக்கு ஒளிர்ந்து கொண்டிருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த அகல்விளக்கு மண்டபம் 15 அடிக்கு பின்னால் தள்ளி நினைவுத்தூபி அமைக்கப் படும். இந்த நினைவுத்தூபி வட்ட வடிவமான அமைப்பு கொண்டது.



அணையா விளக்கு



நினைவுத் தூபி



தியானமண்டபம்

60 அடி உயரம் கொண்டது. கீழே 18 அடி விட்டத்தைக் கொண்டது.

இந்த நினைவுத்தூபியின் பிரதான நுழை வாயில் இருந்து 60 அடி உயரத்திற்கு ஏறிச் செல்ல தேவையான படிக்கட்டுகள் அமைக்கப் படும். மேலும், இந்த தூபியின் உச்சியிலும் ஓர் ஒளி விளக்கு 24 மணி நேரமும் எரியக் கூடிய விதத்தில் அமைக்கப்படும்.

இந்த நினைவுத்தூபியின் நுழைவாயிலின் ஊடாக செல்வது போலவே தியான மண்டபம் அமைக்கப்படும். இந்த தியான மண்டபம் 80க்கு 40 அடி நீள அகலத்தை கொண்டிருக்கும். இந்த மண்டபம் மேடையுடன் அமைக்கப்படும். இந்த மண்டபத்தை ஒட்டியே அலுவலகமும் நூல் நிலையமும் இருப்பது போல அமைக்கப்படும்.

இந்த தியான மண்டபத்திற்கு 2 ஆவது நுழைவாயில் தனியாக அமைக்கப்படும். அந்த நுழைவாயில் வழியாகவும் தியான மண் டபத் திற்கு உட் செல்லலாம்.

இந்த நினைவுச்சின்ன வளாகத்தின் 4 பக் கமும் அமைக்கப்படும் சுவர்களில் இறந்தவர் களின் பெயர்கள் பளிங்கு கற்களில் பதியப் படும். இந்த நினைவுமண்டபத்திற்கு அருகில் ஆகக் குறைந் தது 4 பரப்பு காணியாவது அன்பளிப்பாக கிடைத்தால் அங்கே நித்திய அன்னதான மண்டபம் அமைக்கப்படும்.

ஏற்கனவே நினைவுத்தூபி வளாகத்திற்கு அருகில் உள்ள காணியின சொந்தக்காரர் பலர் அன்பளிப்பாக தினச்செய்திக்கு வழங்கு வதாக தெரிவித்துள்ளனர். இவ்வாறு அன்பளிப்பு செய்ய முன்வருபவர்கள் தினச்செய்தியுடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை அறியப்படுத்தவும்.




இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜுன் 11, 2016 அன்று வெளியிடப்பட்டது.